# யந்த்ரா மந்த்ரா தந்த்ரா

## 1

'சூரியனில் இருந்து தெறித்து விழுந்த ஒரு துண்டு பகுதிதான் இந்த பூமி என்கிறது விஞ்ஞானம். மனித இனமு மற்றுமுள்ள பல கோடி உயிர் இனமும் வாழ இறைவனா படைக்கப்பட்டதுதான் இந்த பூமி என்கிறது மெய்ஞ்ஞான விஞ்ஞானம் புலன்களால் புலன்களுக்காக உருவானது இதற்கு நிரூபணங்கள் வேண்டும். மெய்ஞ்ஞானம் மன சார்ந்தது. கற்பனையும் உணர்வுமானது. நம்பிக்கை என்கி உள்ளுணர்வு மட்டுமே இதற்குப் போதுமானது.

விஞ்ஞானம் தான் அறிந்தவற்றில் மாற்றங்களை உணரு போது தன்னையும் மாற்றிக் கொள்கிறது. சாசுவதமாக மாற ஒரு தன்மையோடு அது நிற்பதில்லை. மெய்ஞ்ஞானம் அப் இல்லை. அது நம்பிக்கை என்னும் தளத்தில் மாறாதத உள்ளது.

இந்த நம்பிக்கைத் தளத்தில் உருவாகி மனித வாழ்க்கை யோடு பின்னிப் பிணைந்து கிடப்பதுதான் ஆன்மிகம்.

ஆன்மிகம் என்றால் 'நமக்கு மேல் ஒரு சக்தி நம் வழி நடத்துகிறது. அந்தச் சக்தியால் அதனிடம் இருந்து வ ஒரு துண்டுச் சக்திதான் நாம்' என்பதே பொருள்.



'இப்படி இறைசக்தியின் வெளிப்பாடாக உள்ள நாமும் கூட ஒரு விதத்தில் இறைவனே' என்றும் இதனுள் கருத்துக் கூறுவோரும் உண்டு.

ஆற்று நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்துக் கொண்டு வந்துவிட்ட பின் அதை ஆற்று நீர் என்போமா? பாத்திரத்து நீர் என்போமா? இறைவன் என்பவன் ஆற்று நீரைப் போன்றவன். நாம் அதில் இருந்து வந்த பாத்திர நீர் போன்றவர்கள் என்று வியாக்யானங்கள் கூறுகின்றவர்கள் பலர் உண்டு.

எது எப்படியோ...? பாமரனும் உணரும் ஒரு உண்மை, 'நமக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறது' என்பதே! அது எப்படிப் பட்ட சக்தி...? ஆணா, பெண்ணா? மிருகமா? இல்லை இதை யெல்லாம் கடந்த வேறு வடிவமா? ஞானிகள் என்போரின் இறுதியான முடிவுப்படி அது ஒரு பேரொளியா? எது?

இந்தக் கேள்விக்கு விடையறிய எவ்வளவோ வழிகள்... அதில் நமது இந்து மதத்தின் பாட்டையில் ஆசை மிகுந்த மனித வாழ்க்கையில் அன்பு, பாசம், காமம், பொறாமை, அச்சம் போன்ற உணர்வுகளால் பின்னப்பட்டு அதில் சிக்கிக்கொண்டு கிடக்கும் லௌகிகமான மனிதனுக்கு உதவுவதற்காக ஞானிகளால் கண்டறியப்பட்ட ஒரு ஆன்மிக வழிமுறைதான் யந்த்ர மந்த்ர தந்த்ர வழிமுறை!

'இந்தச் சுவரின் மேல் நோட்டீஸ் ஒட்டவோ எழுதவோ கூடாது' என்கிற எச்சரிக்கை வாசகத்தின் மேலேயே அந்தத் திரைப்படப் போஸ்டர் ஒட்டப்பட்டி ருந்தது.

நின்று பார்த்துக் கொண்டிருந்தான் ரமேஷ்.

போஸ்டரில் உள்ளதைப் பார்க்கிறானா இல்லை 'இப்படி எச்சரிக்கையையும் மீறி ஒட்டியிருக்கிறார்களே' என்று பார்க்கிறானா என்பது தெரியவில்லை.

அந்தப் போஸ்டரோ 'காதல்' என்கிற சினிமாப் பட
போஸ்டர்!

ஒரு விடலைப் பையனுக்கும் பெண்ணுக்கும் இடை
யில் தோன்றும் ஒரு விதமான அவஸ்தையைச் சொல்லு
திரைப்படம்!

"டேய் ரமேஷ்... என்னத்தடா அப்படி வா
பொளந்துகிட்டுப் பாக்கறே...?" என்று ஒரு குர
சட்டென்று ஒலிக்கவே திரும்பிப் பார்த்தான்.

சரேலென்று சைக்கிளில் தேய்ந்து வந்து நின்றபடியே
சங்கர். ரமேஷின் பால்ய ஸ்நேகிதன்.

"ஒண்ணுமில்லடா!"

"என்ன ஒண்ணுமில்ல...? காதல் பட நாயகி கவ்
இழுக்கறாளாக்கும்...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லடா... இந்தப் பட
ரொம்ப நல்லா இருக்குதுன்னு சொல்லிகிட்டாங்க. நம்
மதுரைல நடக்கற கதையாம்ல...?"

"மதுரைல மட்டுமா.. உலகம் பூரால்ல நடக்குது, எங்
யாருடா லவ்வல?"

—சங்கர் சைக்கிளை உருட்டியபடியே கேட்க
ரமேஷும் அங்கிருந்து விலகி அவனைத் தொடர
தொடங்கினான்.

"நம்ம ஊருல ஷூட்டிங் நடந்துருக்குது. எனக்கு
தெரியவே இல்லையேடா..."

"இப்பல்லாம் டாடா சுமோவுக்குள்ள கேமரா
வெச்சு ஒரு பயலுக்கும் தெரியாம எடுத்துட்டு போய்
றாங்கப்பா. படத்துல நடிச்ச அம்புட்டு பேரும் பு
அதனால ரொம்ப தெளிவாவே ஷூட்டிங் முடிச்
டாங்க. இல்லாட்டி நம்மாளுங்க விடுவாங்களா? சோ



விளம்பரப் பொம்பள வந்தாலே கேமான்னு கூடி நின்னு
பாப்போமேப்பா?"

சங்கரின் நக்கலான கேள்விமுன் ஒரு சிரிப்பு
சிரித்தவன் திரும்பவும் அந்த சினிமா பற்றியே பேச
ஆரம்பித்தான்.

"நீ அந்தப் படத்தைப் பாத்துட்டியா சங்கரு?"

"பாத்தேன்... பாத்தேன்..."

"எப்படி இருக்குது?"

"எனக்குப் பிடிச்சிருக்கு..."

சங்கரின் பதில் ஒரு ஆச்சரியமாக ரமேஷ் முகத்தில்
பரவியது.

"என்னடா... நம்ப முடியலையா?"

"ஆமாம்... நீ இதுவரைல ஒரு சினிமா கூட நல்லா
இருக்குன்னு சொன்னதே இல்லையேடா?"

"நம்பள மாதிரி, காதுல பூ சுத்தாம, படம் பாக்கற
வங்கள இளிச்சவாயனாக்காம யாருடா இப்படிப் படம்
எடுக்கறா?

படத்துக்குப் படம் ஒரு எம்.எல்.ஏ., அவன் பேச்சக்
கேக்கற ஒரு ரவுடி... அந்த ரவுடியைச் சுத்தி ஒரு பத்து
தடிப் பசங்க..! ஊரு உலகத்துல லட்சம் பேர் இருந்தாலும்
ஹீரோ மட்டும்தான் இவனுங்களோட சண்டை போடு
வார். கூட்டமா வந்தாலும் சண்டை போடும்போது
மட்டும் ஹீரோவோட மோத தனித்தனியாதான் அவனுங்
களும் வருவானுங்க.

முந்தியாவது பரவால்ல... ஹீரோ ஒரு குத்து உட்டா
பக்கத்துலதான் உழுவான். இப்பல்லாம் ஒரு குத்துவிட்டா
ஒரு நூறு மீட்டருக்கு அந்தப் பக்கம் போய் உழுவுறாங்க.

முதுகுக்குப் பின்னால கம்பிய கட்டி மேல இழுத்து டுபாக்கூர் வேலை காட்ட நம்மாளுங்க நல்லாவே கத்து கிட்டு இருக்காங்க. கேட்டா தொழில்நுட்ப வளர்ச்சியாம் ஹீரோன்னாலே அவருக்கு எலும்பெல்லாம் இரும்பாலை யும், நரம்பெல்லாம் கம்பியாலையும், ரத்தமெல்லாம் ஆசிட்டாலையும் ஆன மாதிரி ஒரு நினைப்பு. கதை உட்றதுக்கு ஒரு அளவே இல்லாமப் போச்சு... இதை எல்லாம் வீரமா நினைச்சு ஏமாறவும் ஒரு கூட்டம்."

சங்கர் அம்பாரமாக சலித்துக் கொண்டான். "சினிமான்னாலே டுப்புன்னு ஆய்ப் போச்சு... சொல் பொய்ய எதுக்கு சும்மா காப்படி, அரைப்படின்னு அளவா சொல்லிகிட்டு... கொஞ்சமா சொன்னாலும் பொய்தான் கூட சொன்னாலும் பொய்தான்... அதனாலதான் ட கணக்குல அடிச்சு விட்றாங்க போல இருக்கு..." என் ரமேஷும் அதற்கு ஒத்து ஊதினான். வழியெல்லாம் சினிமாப் படப் போஸ்டர்கள்தான்.

சுவர்கள் நிர்வாணமாக இருப்பது பிடிக்காமல் அவற்றிற்கும் மானம் மரியாதை உண்டு என்று கரு அவற்றையெல்லாம் போஸ்டர்களால் மூடி மறைத்த போல இருந்தது. ஆனால் மூடி மறைக்கப் பார்த் போஸ்டர்களில்தான் மானம் மரியாதையே இல்லை.

'அந்தப்புரத்துக்கு வா...'

'அடுத்த வீட்டுக் கட்டில்!'

'படுக்கை அறை நிலா...' என்று காமாந்தகாரமா போஸ்டர்கள்.

அதைப் பார்த்தபடியேதான் இருவரும் நடந்தன

ஏனோ ரமேஷ் அந்தப் படங்களைப் பற்றி எல்லா பேசாமல் திரும்பவும் காதல் பற்றியே பேச்செடுத்தா



"ஏ சங்கர்... காதல் படத்துல காதலிக்கறத தப்புன்னு சொல்றாங்களா... இல்ல ஆபத்துங்கறாங்களா?" சங்கரும் அந்தக் கேள்வி முன் நின்று கூர்மையாக ரமேஷை ஒரு பார்வை பார்த்தான்.

"என்னடா அப்படிப் பாக்கறே?"

"இல்ல அந்தப் படத்தை விடமாட்டேங்கறியே... அதான் கேட்டேன்."

"இல்லடா... எல்லா சினிமாவிலையும் கடைசில காதல் ஜெயிக்கும்... இதுல அப்படி இல்லன்னு கேள்விப் பட்டேன்..."

"உனக்கு ஜெயிக்கணுமா, தோக்கணுமா?"

"என்னடா இது கேள்வி... காதல் எப்பவும் எங்கேயும் ஜெயிக்கணும்டா."

"அப்ப கஷ்டம்தான். உன்னைக் கடவுள்தான் காப்பத்தணும்."— சங்கரும் கீறிவிட்டது போலச் சொன்ன பதிலால் ரமேஷின் முகத்தில் ஒருவித பீதி.

"ஏன்டா நீ யாரையாவது காதலிக்கறியா?" சங்கரின் அடுத்த கேள்வி முன் ரமேஷ் கனமான ஒரு மௌனம் சாதித்தான்.

"முழிக்கறதப் பார்த்தா ஆமாம் போல இருக்கே..." ரமேஷின் மௌனம் தொடர்ந்தது.

"பார்ட்டி யாருடா?"

"அது..."

"சும்மா சொல்லு... காதலிக்கற விசயத்துல நண்பர்கள் தான் உதவ முடியும்."

"அப்ப நீ உதவுவியா?"

"நீ ஆள் யாருன்னு சொல்லு..."

"சொன்னா என்ன சந்தேகப்படக் கூடாது..."

"இதுல சந்தேகப்பட என்னடா இருக்குது... கோட்டான் மாதிரி இருந்துகிட்டு பெரிய வேலை யெல்லாம் பாத்திருக்கேன்னு நல்லாவே தெரியுது. நீ ஆள் யாருன்னு சொல்லு..."

"நம்ம ராகவா பாடி பில்டிங் கம்பெனி இருக்குல்ல..."

"அதுக்கென்ன... நீ ஆளைச் சொல்லு."

"ஆளைத்தான் சொல்றேன். ராகவா பாடி பில்டிங் முதலாளி பாண்டுரங்கன் சார் இருக்காருல்ல...?"

"அடப்பாவி... அவரையா லவ் பண்றே? ஹோமோ செக்ஸா?"

"வாய மூடுடா... நான் சொல்ல வந்ததே வேற..."

"சரி... சரி... சொல்லு..."

"பாண்டுரங்கன் சாரோட ஒரே மகள் தேன்மொழி..."

"தேன்மொழியா...?"—சங்கர் வாயைப் பிளந்து விட்டான். அதன் பின் நெடுநேரம் ஆயிற்று பிரக்ஞை திரும்ப...

"என்னடா நம்ப முடியலையா?"

"எப்படிடா நம்புவேன். அவ எங்க? நீ எங்க? பணம் இல்லாட்டியும் ஒரு பர்சனாலிட்டி வேண்டாமா..."

"நா... நான் கொஞ்சம் ஒல்லி... கொஞ்சம் கறுப்பு தான்- டிகிரி கூட முடிக்கலதான்- நல்ல வேலையும் இல்ல எங்கப்பாவும் ஒரு வாட்ச்மேன்தான்... ஆனா அதுக்காக இப்படியே இருந்துடுவேன்னு மட்டும் நினைக்காதே. பதினாறு வயதினிலே படத்துல நடிச்ச பாக்யராஜை



நினைச்சுப்பார். அன்னிக்கு அவரைப் பார்த்தவங்க இவர் பின்னால பெரிய ஹீரோவா வருவார்னு சொல்லியிருந்தா நம்பியிருப்பாங்களா?"

"உம் அப்புறம்?"

"அவ்வளவு ஏன்டா... நம்ம விஜய் முதல் படத்துல எப்படி இருந்தாரு... இன்னிக்கு மனுஷன் புயலுல்ல...?"

"ரமேஷ்... இவங்கள்ளாம் விதி விலக்குடா. விதி விலக்குகளை உதாரணமா எடுத்துகிட்டா டுமீல் ஆயிடுவேடா..."

"தப்பா சொல்றே நீ... என் தேன்மொழி என்னைப் பெரிய ஆளா ஆக்குவா. அவ என் ரத்தத்துல கலந்துட்டா. இப்ப இந்த உடம்புல ஓட்றது அவளோட ரத்தம்டா..."

"அடப்பாவி... எப்படிடா இப்படி சினிமா ஹீரோ மாதிரியே டயலாக் பேசறே. பாண்டுரங்கன் சார் இந்த மதுரையோட ஒரு மல்டி மில்லினர்டா. கொசுவை அடிக்கற மாதிரி உன்னை அடிச்சு போட்ருவாரு."

"தெரிஞ்சாதானே?"

"அப்படின்னா..."

"இன்னுமா புரியல... நானும் தேனும் ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கப் போறோம்... தாலி கழுத்துல ஏறிட்டா யாரால என்ன பண்ண முடியும்?"

"ரமேஷ்- காதலிக்கறதவிட இப்படி சிந்திக்கறது பெரிய தப்புடா. தாலி கட்டிட்டா சினிமாவுல வேணும்னா மரத்தடி பஞ்சாயத்துல வெச்சு சேர்த்து வைப்பாங்க. நிஜ வாழ்க்கையில் தாலியக் கழட்டி எறிஞ்சிட்டு உன் தேன் மொழியை அமெரிக்காவுக்கோ, கனடாவுக்கோ பாண்டு ரங்க முதலாளி அனுப்பிடுவாரு. உன்னையும் கஞ்சா

கேஸ்ல உள்ள தூக்கிப் போட்டுடுவாங்க. அப்புறம் மதுரை ஜெயில்ல கோடுபோட்ட டவுசர்லதான்டா உன்னை நான் வந்து பாக்கும்படி இருக்கும்,'' சங்கர் நிஜமாலுமே மிரட்சியுடன் விவரித்தான். ஆனால் ரமேஷ் துளி கூட அசரவில்லை.

"சங்கரு... அவர் பருப்பு என்கிட்ட மட்டும் வேகாது. தேன்மொழிய மடக்கின எனக்கு அவரை அடக்கத்தான வழி தெரியாது...?"

"அது சரி... தேன்மொழிய எப்படிடா மடக்கினே?" ரமேஷ் அந்தக் கேள்விமுன் மர்மமாகச் சிரித்தான்.

"சிரிக்காம சொல்லுடா. அந்தப் புள்ள நல்லா தளதளன்னு சிம்ரனுக்குத் தங்கச்சி மாதிரி இருக்கும். அது எதை வெச்சுடா உன்கிட்ட மயங்கிச்சு?" ரமேஷ் அதற்கும் ஒரு சிரிப்பு சிரித்தான்.

"சொல்லுடா. நிஜமாலுமே அது உன்னைக் காதலிக்குதா? பாத்துடா. பணக்காரப் புள்ளைங்களுக்கு எப்பவும் துணிச்சல் ஜாஸ்தி... நான் நிறைய இடத்துல கேள்விப் பட்டுருக்கேன். கார் டிரைவருங்க, தோட்டக்காரங்க இவங்கள அப்படியே சைட்ல யூஸ் பண்ணிக்கு வாங்கன்னு...'' சங்கர் பேச்சு ரமேஷை ஒரு மாதிரி முறைப்புக்கு மாற்றியது.

"என்னடா... நீ கேள்விப்பட்டதில்லையா?"

"அந்த மாதிரி பொண்ணு இல்லடா தேன்மொழி. அவளை வளைச்சு இழுத்தது நான்."

"எப்படிடா... அவ மயங்கற அளவுக்கு உன்கிட்ட நல்லபடியா ஒரு விசயம்கூட இல்லையே... எப்படிடா நம்ப?"

"அப்ப ஒண்ணு பண்ணு... இன்னிக்கு சாயந்திரம் தெப்பக்குளம் மாரியம்மன் கோவில் வாசல்ல நான்



நின்னுகிட்டிருப்பேன். சரியா ஆறுமணிக்கு வந்து பார் என்ன நடக்குதுன்னு...'' ரமேஷ் ஒரு மாதிரி தெனாவெட்டாகச் சொல்லிவிட்டு நடக்கவும் சங்கருக்குத் திகைப்பாக இருந்தது.

'இந்தக் காதல் எப்படி நடந்திருக்கும்?' கேள்வியில் விழுந்தவனால் அதன்பின் எழுந்திருக்கவே முடியவில்லை.

## 2

மனத்தின் திறம்தான் மந்திரம் என்பார்கள். அது இருக்கட்டும்... மனம் மனம் என்று பேசுகிறோமே... எது மனம்?

அது எப்படிப்பட்டது?

எவ்வளவு பேர் மனம் பற்றி நுட்பமாக யோசித்திருப்பார்கள்? மனம் என்பதை அனேகம் பேர் உடம்புக்குள் இருக்கும் ஒரு உறுப்பாகத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் இதயப் பகுதியில் கையை வைத்து மனம் அங்கே இருப்பதாக டயலாக் அடிப்பார்கள். இன்னும் சிலர் மூளைதான் மனம் என்கிற அளவுக்குச் சற்று முன்னேறியிருப்பார்கள்.

இந்த மனம் எப்படிப்பட்டது?

இது சப்தத்தால் ஆனது... சதா ஏதாவது நினைத்துக் கொண்டும், யோசித்துக் கொண்டும், கற்பனை செய்து கொண்டும், பார்த்துக் கொண்டும், பார்ப்பதை மொழியாகிய சப்த வடிவில் அர்த்தப்படுத்திக் கொண்டும் எதையாவது கேட்டுக் கொண்டும், இருப்பதுதான் மனமாகும், 'சுருக்கமாக மனதைப் பற்றிச் சொல்வதானால் இது ஒரு உள்சப்தம். உடம்பு என்றால் கை, கால், வயிறு, முதுகு என்று வடிவமாக உணர்கிற மாதிரி மனது என்றால் சப்தமாக உணர்கிறோம்.

அதாவது மிருதுவான அதிர்வு இல்லாத சப்தங்களால் ஆனதுதான் மனம். இது மொழியைக் கொண்டு

படுகிறது. ஒருவர் எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளாரோ அந்த மொழியின் வடிவாகவே அது இருக்கும். மற்ற மொழிகள் எல்லாம் மனத்தின் அளவில் அர்த்தமற்ற ஓசைகளே. மொத்தத்தில் மனம் தான் வரையி வைத்திருக்கும் மொழியாகிய சப்தத்தைக் கொண்டே அறிந் படுகிறது. அந்த மொழியின் சொற்களுக்கு ஏற்பப் பொருள் கொண்டு அது இயங்குகிறது.

மனத்துக்கு எதற்கு இவ்வளவு நீண்ட விளக்கம் என்கி கேள்வி எழலாம்... காரணம் இருக்கிறது. இறை மந்திரங்களு சப்த ரூபமானவையே... இவற்றை மனதில் இட்டுத் திரும்ப திரும்பக் கூறுகின்றோம். அப்படி மந்திரங்களைக் கூறிடு போது அந்த நேரத்தில் வேறு எண்ணங்கள் அதாவது வேறு சப்தத்துக்கு மனதில் இடமில்லாமல் போகிறது.

'ராமா' என்றும், 'நமசிவாய' என்றும், 'சரவணபவ' என்று 'நாராயணா' என்றும் திரும்பத் திரும்ப இறை நாமங்களை சிலர் கூறிடும்போது அந்த நேரத்தில் வேறு எண்ணங்களை அவர் எண்ணமுடியாது. அதே சமயம் இந்தச் சொற்க குறிப்பிட்ட அளவு Vibration-ஐ உருவாக்குகின்றன. இதனா உடம்பின் ரத்த ஓட்டம், உடம்பின் உஷ்ணம், உடம்பி மின் ஓட்டம், சுரப்பிகளில் சுரக்கும் திரவத்தின் அளவு என் சகலத்திலும் ஒரு மாறுபாடு ஏற்படுகிறது. இது உணர முடி அளவு, உணர முடியாத அளவு என்று இரு விதங்களி உள்ளது!

போர்டிகோவில் ஹோண்டா சிடி கார் நின்றப இருந்தது. வெள்ளை வெளேர் என்று பளீர் வெளுப்பி மின்னியபடி இருந்தது. துடைத்துக் கொண்டே இருந்த டிரைவர். அவனும் வெள்ளை பேண்ட், வெள்ளை ச என்று பளிச்சென்று இருந்தான்.

கார் நிற்கும் அந்த பங்களாவில்கூட எங்கு பார்த் லும் வெண்மைதான். அதனால்தானோ என்னவோ மத



என்று அந்த மாளிகைக்குப் பின் வெள்ளை மாளிகை என்று அந்த மாளிகைக்குப் பெயர்.

உள்ளே வராண்டா! வராண்டாவைக் கடந்தால் மிகப்பெரிய வேலைப்பாடுள்ள நிலையைக் கடந்த நிலையில் விசாலமான ஹால். ஹாலில் ஏராளமான சோபாக்கள்.

சோபாக்களில் கூட பளீர் வெளுப்பு. ஒரு சோபாவில் பாண்டுரங்கன் அமர்ந்துகொண்டு செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். வெள்ளை சட்டை, வெள்ளை பேண்ட் என்று அவரிடம் கூட ஒரு வெள்ளை மின்னல்.

வெளியே சிலர் காத்திருந்தார்கள். பாண்டுரங்கனின் பி.ஏ. அவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தான். ஒருவர் தன் மகனுக்கு வேலை கேட்டு வந்திருந்தார்.

"அப்ளிகேஷனைக் கொடுத்துட்டுப் போங்க. அதிர்ஷ்டம் இருந்தா வீட்டுக்கு இன்டர்வியூ கார்டு வரும்," என்று அவரைச் சமாளித்த பி.ஏ. அடுத்தவரிடம் என்ன வென்று கேட்க அவர் பை நிறைய பூ பழத்துடன் மகள் கல்யாணப் பத்திரிகையோடு நின்று கொண்டிருந்தார்.

"என்னிக்குக் கல்யாணம்?"

"வர்ற இருபத்தி ஒன்பதாம் தேதிங்க..."

"அன்னிக்கு அவர் கொடைக்கானல்ல போர்டு மீட்டிங்ல இருப்பாரே..."

"அடடா... ஐயா வராட்டி என் மகள் கல்யாணம் கல்யாணமாகவே இருக்காதுங்களே."

"இந்த மாதிரி டயலாக்கை அவர் நிறையவே கேட்டுட் டாரு. நீங்க பத்திரிகையை என்கிட்ட கொடுத்துட்டுப் புறப்படுங்க..."

"இல்ல தம்பி... ஐயா கைல கொடுக்கத்தான் பெரிய குளத்துல இருந்து வந்துருக்கேன். ஐயா எங்க வரைல எங்க குல தெய்வம் மாதிரி..."

"போதும்... போதும்... அப்படிப் போய் உட்காருங்க. நான் கூப்பிட்றேன்... உம் நீங்க...?"

பி.ஏ. அடுத்து அங்கு நின்றபடி இருந்த ஒரு தும்பைப்பூ போன்ற வேட்டியணிந்தவரைப் பார்த்தான். மேலே சட்டை அணிந்திராமல் ஒரு துண்டைக் கொண்டு மார்பை மூடியிருந்தார். தலைமுடியிலும் தாடியிலும் கொக்கு பறந்தது. அப்படி ஒரு வெளுப்பு. கண்களிலும் ஒரு அதீத பிரகாசம்.

"உங்களைத்தான்... வாட்டு யூ வான்ட்?" பி.ஏ. கொஞ்சம் இங்கிலீஷினான். அந்த மனிதர் மென்மையாக ஒரு சிரிப்பு சிரித்தார்.

"ஹலோ உங்களைத்தான் கேக்கறேன். இங்க நான் தான் எல்லாம்..."

"எல்லாம்னா?" அவர் வாயைத் திறந்துவிட்டார்.

பி.ஏ.வுக்கு அந்த மனிதர் கேட்ட தோரணையே என்னவோ போல் இருந்தது. அவரும் கையைக் கட்டிக் கொண்டு அப்படியே தாடியையும் நீவிவிட்டுக் கொண்டார்.

"நான் சாரோட பி.ஏ.. கண்டவங்க அவரைப் பார்க்க நான்அனுமதிக்கக் கூடாது. அது என் டூட்டி..."

"கண்டவங்கன்னு நீங்க யாரைத்தம்பி குறிப்பிட்றீங்க?" அவரும் மிருதுவாகவே திருப்பிக் கேட்டார்.

சில இடங்களில் தலை சமத்காரமாக இருக்கும். வா... ஆட்டமான ஆட்டம் ஆடும். எப்படியும் என்றா...



யாராலாவது வெட்டப்பட்டு விடுவோம் என்பது அந்த வாலுக்குத் தெரியும். அதனால் இருக்கும்வரை ஆடிவிட வேண்டும் என்பது அதன் உள்நோக்கமாக இருக்கும். அப்படித்தான் இருந்தது அந்த பி.ஏ.வின் அணுகுமுறை. "நீங்க யாரு... எதுக்கு வந்திருக்கீங்கன்னு சொல்லுங்க. அப்புறம் சொல்றேன் நீங்க கண்டவரா... காணாதவ ரான்னு–" — பி.ஏ.விடம் கொஞ்சம் கிண்டல் தொனித்தது.

நடுவில் பாண்டுரங்கனே செல்போனை முடக்கி பாக்கெட்டில் போட்டவராக விறுவிறுவென்று நடந்து வந்தபடி இருந்தார். அவர் வருவதைப் பார்க்கவும் பி.ஏ. விழுந்தடித்துக் கொண்டு ஓடினான்.

அவர் காத்துக் கொண்டிருப்பவர்கள் யாரையும் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

"என்னய்யா சத்தம்... நீ எப்பய்யா மெள்ளப் பேசப் போறே?" என்று பி.ஏ.வை வைதபடியே அவர் நடப்பதில் ஒரு அலட்சியம் தெரிந்தது.

"வணக்கம்யா...", "நமஸ்காரம் சார்..." என்று அங்கு நின்று கொண்டிருந்தவர்களின் குரல் எதையும் அவர் லட்சியம் செய்த மாதிரியே தெரியவில்லை.

நின்று கொண்டிருந்த காரில் ஏறிக்கொண்டுவிட காரும் சீறிக் கொண்டு கிளம்பியது.

பி.ஏ. திரும்பி வந்தான். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தான். குறிப்பாக அந்த வெள்ளை தாடிக்காரரை...

பாண்டுரங்கன் அலட்சியமாகப் போனது அவரை நிச்சயம் குத்தியிருக்கும் என்கிற மாதிரி பார்த்தான். அவர் உடனே கைக் கெடிகாரத்தைப் பார்த்தார். அந்த நாளைய ஃபேவர் லூபா வாட்ச். செவ்வகத்தில் உள்ளடக்கமாக ரோமன் லெட்டரில் வினாடி முள் சகிதம் பளிச்சிட்டது.

"கெடிகாரத்தைப் பார்த்துக்கிட்டே அப்படியே புற படுங்க. ஐயா அவசர வேலையாப் போய்ட்டார். இனி எப்ப வருவாரோ... உம்... உம்... புறப்படுங்க." என்றா பி.ஏ.

மற்றவர்கள் தொங்கிப்போன முகங்களோடு கிளம்பி னார்கள். ஆனால் அந்த வெள்ளை தாடிக்கார அப்படியேதான் நின்று கொண்டிருந்தார்.

"ஹலோ... உங்களத்தான். புறப்படுங்க..."

"இல்ல... நான் பாண்டுரங்கனைப் பார்த்துட்டே போறேன்." அவர் பெயரைச் சொன்னது அவன் முகத்தில் வலியாகப் பரவியது.

"என்னது... பாத்துட்டுப் போறியா? ஆமா... என்ன நீ எம்.டி.யோட பேரைச் சொல்றே?"

"பேருங்கறதே சொல்றதுக்குத் தானேப்பா...?"

"அது சரி... எனக்குத் தெரியாது பாரு..."

"அப்ப உனக்குத் தெரியும்கறியா?"

"யோவ்... என்ன கிண்டலா? எம்.டி.யே பாக்கறே னாலும் நீ அவரைப் பாக்க முடியாது. கிளம்புய்யா..."

"எதுக்கு இவ்வளவு கோபம்? நான் ஒரு நல்ல விஷ பேச வந்துருக்கேன்."

"அது என்னன்னு என்கிட்ட சொல்லு. நான் எம்.டி கிட்ட சொல்லி—அவர் பேசப் பிரியப்பட்டா சொல்றே

"நான் அதை அவர்கிட்டப் பேசறதுதான் அவருக்கு நல்லது. எனக்கும் நல்லது."

"அப்படி என்னய்யா விஷயம்... பெரிய சிதம் ரகசியமா?"



பி.ஏ. 'சிதம்பர ரகசியமா' என்று கேட்டதுதான் தாமதம்— அந்த தாடிக்காரர் கொஞ்சம் கோபத்தோடு பி.ஏ.வை முறைத்தார்.

"என்ன முறைக்கறே... கிளம்பு. கிளம்பு..."

"வேண்டாம் தம்பி. விரட்டாதே. நான் உன் எம்.டி.யை பார்த்துட்டே கிளம்பறேன். ரொம்ப முக்கிய மான விஷயம்."

"அவர்தான் ஃபேக்டரிக்குக் கிளம்பிட்டாரே?"

"இல்ல. அவர் திரும்பி வருவாரு..."

"இப்ப வரமாட்டாரு... இனி மதியம் சாப்பாட்டு நேரத்துக்கு தான்..."

"இன்னிக்கு அவரால சாப்பிட முடியாது தம்பி..."

"என்னய்யா நீ... எதைச் சொன்னாலும் அதுக்கு ஒரு பதில் சொல்றே- மத்யானம்தான் வருவாருங்கறேன். இல்ல இப்ப வருவாருங்கறே... சாப்பிட முடியாதுன்னு வேற சொல்றே. என்ன நினைச்சுகிட்டிருக்கே நீ மனசுல..." பி.ஏ. வின் குரல் ஒரு உச்சத்துக்குப் போனது. அந்த தாடிக்காரர் பதிலுக்கு ஆழமாக ஒரு பார்வை மட்டும் பார்த்தார். வேறு எதுவும் பேசவில்லை. பேசாமல் மெயின் கேட் நோக்கி நிதானமாக நடக்க ஆரம்பித்தார். பி.ஏ.வும் வெறித்தான்.

"சுத்த லூசுப் பயலால்ல இருக்கான்..." என்று ஒரு கமெண்ட்டுடன் உள்ளே திரும்ப யத்தனித்தபோது படு வேகமாக கேட் திறக்கப்படும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்த பி.ஏ.வின் கண் எதிரில் பாண்டுரங்கன் வேகமாக ஏறிச்சென்ற அதே கார்.

படுவேகமாக உள்நுழைந்த அந்தக் காரில் இருந்து பாண்டுரங்கனும் இறங்கியவராக வெகுவேகமாக உள்ளே ஓடினார். பி.ஏ. அதிர்ந்தார்.

டிரைவரைப் பார்த்தான்.

“திடீர்னு வயிறு சரியில்லாம வண்டியைத் திரு புன்னுட்டாரு... அதான்...” என்றான்.

பி.ஏ. உள்ளே ஓடினான்... பாண்டுரங்கன் டாய் லெட்டுக்குள் நுழைந்துவிட்டது தெரிந்தது. பதற்ற தோடு காத்திருக்க— ஒரு பதினைந்து நிமிடங்கள் கழித் பாண்டுரங்கனும் வெளிப்பட்டாரு. வெலவெலத்து போயிருந்தார்.

“சார்... நம்ம டாக்டருக்குச் சொல்லட்டுங்களா?” பி பணிவாகக் கேட்டான்.

“நான் வரும்போதே சொல்லிட்டேன். சீக்கிரம் அவர் வர்றாரா பாரு...” பாண்டுரங்கன் அப்படியே சோபாவில் சுருண்டுவிட, டாக்டரும் உள் நுழைந் கொண்டிருந்தார். அடுத்த பத்தாவது நிமிடம் பாண் ரங்கனுக்கு ஒரு பெய்ன் கில்லருடன் டயரியாவைக் கண் ரோல் செய்யும் இன்ஜெக்ஷனையும் போட்டுவிட் நிமிர்ந்தவர் “மதியம் எதுவும் சாப்பிட வேண்டா; நா ஈவினிங் வந்து பாக்கறேன்.” — என்றார். பி.ஏ.வுக்கு அ வெள்ளை தாடிக்காரர் சொன்னதுதான் ஞாபகத்துக் வந்தது.

கொஞ்சம் அதிர்ச்சியாகவும் இருந்தது.

அவர் சொன்னது தற்செயலா... இல்லை அ தான் தீர்க்கதரிசியா?

குழம்பத் தொடங்கினான்.

அந்த சமயத்தில் அவரது மனைவியும் தாயும் எங் கோவிலுக்குப் போய்விட்டுப் பிரசாதத்துடன் வந்த இருந்தனர். அவரைப் பார்த்துவிட்டுப் பாய்ந்து வந்த

“ஏங்க... என்னங்க ஆச்சு?”



“எலே பாண்டு... என்னய்யா பண்ணுது? உள்ள படுக்கை அறைல படுக்காம இப்படி இங்கையே படுத்தா என்ன அர்த்தம்...”

அவர் மனைவியும் தாயும் மாறிமாறிக் கேட்டனர்.

“கத்தாதீங்க... திடீர்னு வயிறு சரியில்ல...”

“டாக்டருகிட்ட காட்னியா?”

“எல்லாம் காட்டியாச்சு. நீங்க போய் உங்க வேலையைப் பாருங்க...”

“இரய்யா... இந்தப் பிரசாதத்தை வெச்சு விட்றேன். கல்லு மாதிரி உடம்புக்காரன் நீ. நீ இப்படி படுத்தே நான் பார்த்தது இல்லையே...” என்றபடி அவர் தாய் பிரசாத விபூதியை நெற்றியில் தீட்டிவிட்டார். அவரோ முகம் சுளித்தார்.

“தா... உனக்குச் சாமி பிடிக்காதுன்னு எனக்குத் தெரியாதாக்கும்? இது என் ஆசைக்கு நான் வைக்கறது. தடுக்காதே...” என்றாள் அவர் தாய். இடையிட்டது செல்ஃபோன். எடுத்துக் காதில் வைத்தார். பேக்டரியில் இருந்து அழைப்பு. மனைவி பார்த்துக் கொண்டே நின்றாள். வாயைத் திறக்கவே பயப்படுகிற மாதிரிகூடத் தெரிந்தது.

“என்னால இன்னிக்கு வரமுடியாது. நீங்களே எல்லாத்தையும் பார்த்துக்குங்க. அந்தக் கோவில் இட விஷயமா யார் வந்தாலும் முடியாதுன்னு சொல்லிடுங்க.” என்றபடி செல்ஃபோனையும் முடக்கினார்.

பி.ஏ. அவரையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

“என்னய்யா... உன்னை நான் எஞ்சின் ஷாப்புக்குப் போகச் சொன்னேன்... போகலியா?”

“புறப்படத் தயாரானப்பதான் சார் நீங்க திரும்பி வந்திங்க...”

“சரி... நீ கிளம்பு...”

“சார்...”

“என்னய்யா?”

“ஒரு ஆச்சரியமான விஷயம் சார்.”

“என்ன ஆச்சரியம். நான் இப்படித் திரும்பி வந்து இப்படிப் படுத்துக்கிடக்கறதா?”

“இல்ல சார்... ஆமாம் சார்...”

“என்னய்யா... ஒரு கேள்விக்கு இரண்டு பதிலா?”

“அது வந்து சார்... உங்களப் பார்க்க ஒருத்தர் வந்து ருந்தார். என்ன விஷயம்னு கேட்டப்போ, உங்க கிட்டதான் பேசணும்னு சொல்லிட்டார். அப்படியே நீங்க திரும்பி வருவீங்க... இன்னிக்கு மதியம் எதுவும் சாப்பிட மாட்டீங்கன்னும் சொல்லிச் சிரிச்சாருங்க. அதே மாதிரி.”

“என்னய்யா உளர்றே...?”

“உளறலை சார். அவரைப் பார்த்தாலும் சாதா ணமா தெரியல. வெரிவெரி சிம்பிள் லுக். வெள்ளைத் தாடி... சாமியார் மாதிரின்னும் சொல்லலாம்...”

“அதான் அருள்வாக்கு மாதிரி அடிச்சுவிட்டு கான். இந்த சாமியார், பூசாரி, அப்புறம் கோயில் கட்டுறே கும்பாபிஷேகம் பண்றேன்னுல்லாம் ஒருத்தர் கூ என்னைப் பார்க்க வரக்கூடாதுன்னு சொல்லியிருக்கு தெரியும்ல.”

“நல்லாவே தெரியும் சார். அதனாலதான் அவ நான் உங்களப் பார்க்க விடலை.”



“இப்ப எங்க அந்த ஆள்... போய்ட்டானா?”

“போய்ட்டார் சார்...”

“சரி சரி... நீ எஞ்சின் ஃபேக்டரிக்குக் கிளம்பு, நான் கொஞ்சம் கண்ணயர்றேன்...” பாண்டுரங்கன் கத்தரிக்கவும் பி.ஏ. விலகினான். ஆனால் அவர் மனைவி ஆனந்தி நின்றபடியே இருந்தாள்.

அவளிடம் இறுக்கமாய் மௌனம்.

“என்ன ஆனந்தி... எதாவது பேசணுமா?”

“ஆமாங்க... உங்க கூட பேச இப்ப நேரம் கிடைக் கும்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல. அதான்...”

“சொல்லு... என்ன விஷயம்?”

“முதல்ல உங்க உடம்பைப் பத்திச் சொல்லுங்க. இப்ப எப்படி இருக்கு?”

“அதான் டாக்டர் வந்து ஊசி போட்டுட்டு போயி ருக்காருல்ல... எல்லாம் சரியாப் போயிடும். நீ விஷயத் துக்கு வா.”

“அது வந்து...”

“எனக்கு இப்படி வார்த்தையை பபுள்கம் மாதிரி இழுத்தா பிடிக்காதுன்னு உனக்குத் தெரியும்தானே?”

“இல்லே... எப்படிச் சொல்றதுன்னுதான்...”

“எதுவா இருந்தாலும் தேங்கா உடைக்கற மாதிரி பேசறவன் நான். என்கிட்டப் பேசும் போது கூட நீ இப்படி மென்னு துப்பினா என்ன அர்த்தம்?”

“இல்ல... நம்ம தேன்மொழி பத்தின விஷயம் இது...”

“அவளுக்கு என்ன...? ஆமா... காலேஜிக்குப் போயி ருக்கால்ல?”

"அவ போய்ட்டா... இது அவ ஜாதகம் சம்பந்தமா..." ஆனந்தி ஜாதகம் என்று சொன்னதும் அப்படியே பாண்டு ரங்கன் முகம் க்ஷணத்தில் மாறியது.

"என்ன ஆனந்தி ஜாதகம் ஜோசியம்னுகிட்டு... அவளுக்கு ஜாதகம் பாத்தியாக்கும்?"

"இல்லேங்க... தற்செயலா..."

"என்ன... தற்செயலா?"

"சுப்ரீம் ஹோட்டல்ல தோசைத் திருவிழா நடக்கு துன்னு போயிருந்தோம். போன இடத்துல 'கம்ப்யூட்ட ஜாதகம் பார்க்க இருபது ரூபாதான். அப்படியே புட்டு புட்டு வைக்கறோம்'னு சொல்லி ஒரு போர்டைப் பார்த்து விட்டு தேன்மொழியும் போய் தன் டேட் ஆஃப் ப அப்புறம் டைமைச் சொன்னா..."

"வளவளங்காதே... கம்ப்யூட்டர்ல கணக்கு வழக்கு தான் போடுவாங்க. இந்த ஜோசியம் ஜாதகம் பித்தலாட்ட வேலையும் அதுல நடக்குதா?"

"அந்த ஜாதகத்தைப் பாத்த பிறகுதான் தெரிஞ்சுக் அது ஒண்ணும் பித்தலாட்டம் மாதிரி தெரியலீங்க."

"ஜாதகம் — ஜோசியம்னாலே பித்தலாட்டம்தான்..."

"உங்களால நானும் அப்படித்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா அந்தக் கம்ப்யூட்டர் ஜாதகத்தை பார்த்த பிறகு ஒருவேளை அது உண்மையா இருக்கு மோன்னு தோணுது."

"சரி விஷயத்துக்கு வா. அந்த ஜாதகத்துல அப்ப என்ன இருந்துச்சு."

"நம்ம தேன்மொழிக்கு இந்த மாசமே கல்யாண ஆகிடுமாம்..."—ஆனந்தி தயங்கித் தயங்கித்தான் சொ னாள்.



"மண்ணாங்கட்டி... அவளுக்கு முழுசா இன்னும் பதினெட்டு வயசு முடியல. தெரியும்தானே?"

"அது எனக்குத் தெரியாமலா? ஆனா அந்த ஜோசியத்துல வந்ததைச் சொல்றேன். அவ காதல் கல்யாணம் செய்துக்குவான்னும் சொல்லிச்சு." ஆனந்தி ஒருவாறு சொல்லி முடித்தாள். பாண்டுரங்கனும் சற்று நெற்றியைச் சுருக்கிவிட்டு "சரி... போய் வேலையைப் பார். நான் பாத்துக்கறேன்," — என்றவர் அப்படியே திரும்பி தலையணையில் முகம் புதைத்தார். அவர் ஆனந்தி சொன்னதை ஒப்புக் கொண்டாரா இல்லை அலட்சியம் செய்தாரா என்பதை அவளாலேயே உணர முடியவில்லை!

## 3

மனம் என்பது சப்தத்தால் ஆனது என்று பார்த்தோம். பஞ்சபூதங்களால் ஆன இந்த உடம்பில் ஆறாவது அறிவு உள்ள மனிதன் மட்டுமே அந்த அறிவின் விளைவால் ஏழாவதான சப்தத்தை மொழியாகப் பெற்றிருக்கிறான்.

இன்றைய தினம் மனிதன் என்பவன் எவ்வளவோ சாதித்திருக்கிறான். விஞ்ஞானம் என்பதே மனிதன் கண்டறிந்ததுதான். அந்த விஞ்ஞானத்தின் மூலமாக எவ்வளவோ விஷயங்களை எட்டிவிட்டான். எட்ட வேண்டியதும் நிறைய உள்ளது.

அனைத்துக்கும் காரணம் அவனது மொழியாகிய சப்தம்தான். சப்தத்தில்தான் எல்லாம் இருக்கிறது என்பது இதனால் தெள்ளத் தெளிவாகிறது. ஒரு மனித மனம் மகிழ்வோடு இருக்கிறது என்றால் சந்தோஷமான எண்ணங்கள் சூழ்ந்துள்ளது என்று பொருள். அதே மனம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் துக்கமான எண்ணங்கள் சூழ்ந்திருப்பதை உணரலாம். மொத்தத்தில் துக்கமோ மகிழ்வோ இது சப்தமாகிய எண்ணங்களைச் சார்ந்தே உள்ளது.

உடம்புக்கு ஒரு கேடு என்றால் அதற்கு மாத்திரை மருந்து பயன்படுகிறது. மனத்துக்கு ஒரு கேடு என்றால் அதாவது மனம் என்கிற சப்தத்துக்கு ஒரு கேடு என்றால் அதை குணப்படுத்த மாத்திரை மருந்துபோல இன்னொரு சப்தம்தான் இருக்க முடியும். அந்த இன்னொரு சப்தம் திற மிக்கதாக இருக்க வேண்டும். அதாவது மனத்துக்கு அது திறம் தருவதாக இருக்க வேண்டும். மனதுக்குத் திறம் தருவதாலேயே அதற்கு மந்திரம் என்று பெயரிட்டனர் நம் முன்னோர். மந்திரத்தை இப்படித்தான் கண்டறிந்தனர்!

**மா**லைவேளை! மாரியம்மன் தெப்பக்குளத்தை ஒட்டி ஜேஜே என்று இருந்தது மக்கள் கூட்டம்.

அந்த நாளில் திருமலைநாயக்கர் மதுரை மீனாட்சி யம்மன் கோவிலை எடுத்துக் கட்டி பல நல்ல காரியங்க செய்வதற்கு நிறைய மண் தேவைப்பட்டது. அதற்காக தோண்டப்பட்ட இடம் வெறும் குழியாகிவிடாம அதையும் குளமாக்கி விட்டார். ஒரே சமயத்தில் ஒ பக்கம் குளம் எடுத்து மறுபக்கம் கோவிலையும் கட் முடித்தார் நாயக்கர்.

குளம் என்றால் நம் ஊரில் இருக்கும் ஒரு பள்ளி கூட மைதானம் அளவெல்லாம் இல்லை. இந் குளத்தின் பரப்பளவுக்குள் ஒரே சமயத்தில் இரண் இரண்டு நான்கு அணிகள் டெஸ்ட் மேட்ச் விளையா லாம். அவ்வளவு பெரிய குளம்!

இன்றுதான் வீட்டுக் கிணற்றில்கூட தண்ணீர் இரு தில்லையே... இவ்வளவு பெரிய குளத்தில்தானா இரு விடப் போகிறது?

காய்ந்து கிடந்தது. அந்தப் பகுதியைச் சார்ந்த பள் கூடச் சிறுவர்களுக்கு எல்லாம் அந்தக் குளம்தான் வி யாட்டு மைதானம். நடுவில் கோபுரத்தோடு கூடிய வ



மண்டபம். விழாக்காலங்களில் மீனாட்சி, சுந்தரேஸ்வரரோடு வந்து தங்கிச் செல்வாள்.

மற்ற நாட்களில் லோக்கல் மீனாட்சி — சுந்தரர்கள் தங்கள் காதல் களியாட்டத்திற்கு அங்கே முயற்சி செய்வார்கள். சுற்றிலும் மரம் வளர்ந்து மறைவாக இருப்பதால் வசதியாகப் போய்விட்டது.

குளத்தங்கரையில் ஜில்லென்று மேக்கப்புடன் காத்துக் கொண்டிருந்தான் ரமேஷ்.

எவ்வளவுதான் மேக்கப் போட்டாலும் அவனைக் கவர்ச்சியாகவே உணரமுடியவில்லை.

சங்கரும் தன் சைக்கிளில் மிதிமிதியென்று மிதித்தவனாக வந்து சேர்ந்தான். வெகுதூரத்தில் இருந்து வந்திருந்ததால் வியர்த்து வடிந்திருந்தான். மூச்சிலும் பெருமூச்சு.

"வா சங்கரு..."

"நீ சொன்ன மாதிரியே வந்துட்டேன். ஆனா அந்தப் பொண்ணு வருதான்னு தான் பாக்கணும்."

"சந்தேகம்... இல்ல?"

"சந்தேகப்படாம...? நான் ரஜினிகாந்தோட போயஸ் கார்டன்ல அவர் ஊட்ல உக்காந்து டிபன் சாப்டேன்னு சொன்னா நீ நம்புவியா?"

"ரைட் ரைட்... கொஞ்சம் பொறுத்துப்பாரு — என் ஆள் எப்படி வர்றாள்னு..." ரமேஷ் தெனாவெட்டாகப் பதிலளிக்க, ஒரு ஹோண்டா சிடி காரும் அப்போது உரசிக் கொண்டு வந்து நின்றது.

அதிலிருந்து ரமேஷ் குறிப்பிட்ட தேன்மொழியும் இறங்கினாள். அவளே காரை ஓட்டிக்கொண்டு வந்திருந்தாள்.

அவளைப் பார்க்கவும் சங்கர் கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டான். அவளோ அவன் அருகே வெட்கப்பட்டவளாக "சாரி டியர்... லேட்டாயிடிச்சு. அப்பாக்கு இன்னிக்கு உடம்பு சரியில்ல. வீட்லையே இருந்தார். அதான் ஏமாத்திட்டு வர்றதுக்கு நேரமாயிடிச்சு..." என்றாள். அப்படிப் பேசி முடிப்பதற்குள் நூறு தடவை சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டாள்.

கிட்டத்தட்ட சினிமா நடிகை போலவே இருந்தாள்.

அவர்களுக்கெல்லாம் எப்படி தலையை வாரிப் பின்னிக் கொள்வது என்பது ஒரு பாதகச் செயலோ! அப்படித்தான் இவளும் நினைக்கிற மாதிரி இருந்தது. ஷாம்பு விளம்பரக் கூந்தல்போல இடைவரை நீண்டு காற்றிலாடியது.

சங்கர் வாயைப் பிளந்து விட்டிருந்தான்.

"ஆங்... தேன்மொழி... இவன் என்ஃப்ரெண்ட். பேர் சங்கர். நம்ம மதுரை மெடிக்கல் காலேஜ்ல ஃபைனல் இயர் பண்றான்" என்றான்.

சங்கருக்கு பகீர் என்றது. பி.எஸ்சி.யே வசப்படவில்லை. அதிலேயே நாலு பேப்பர் அரியர்ஸ் இருக்கிறது.

"டேய்..."

"என்னடா டேய்... ஒரு எம்.பி.பி.எஸ். ஸ்டுடன்ட் சைக்கிள்ல வந்துருக்கான்னு தேன் ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டா. ஏன்னா டூவீலர், கார்னு மனுஷங்க மாறிட்டதால உடல்பயிற்சியே இல்லாம போயிடிச்சு. யாரைப்பாரு எண்பது கிலோ, நூறு கிலோ இருக்காங்க. ஆனா சைக்கிள் ஓட்றவங்களைப் பாரு... அப்படி ஸ்லிம்மா இருக்காங்க. ஒரு டாக்டர் நீயும் அந்த உண்மை தெரிஞ்சுதான் சைக்கிள்ள வர்றே... இதைத் தேன்மொ



யால புரிஞ்சுக்க முடியும்."— என்று கொஞ்சம் பொய், கொஞ்சம் புத்திசாலித்தனத்தைக் கலந்து பேசினான்.

அவளும் ரசித்துச் சிரித்தாள். அப்படியே "ரமேஷ்... யாராவது பார்த்துடப் போறாங்க. வாங்க மறைவா போய் உட்காருவோம்" — என்று அவசரப்பட்டாள்.

அவனும் "சரி சங்கர்.. நீ புறப்படு. பை.." என்றபடியே கற்படிகளில் இறங்கி தெப்பக்குளத்தின் அடிமண்வெளியில் கால் வைத்தான். அவள் கூந்தலை ஒதுக்கிக் கொண்டே அவனோடு சேர்ந்து நடந்தாள்.

சங்கர் வரையில் அது கனவா இல்லை நனவா என்று சந்தேகமாகக் கூட இருந்தது. உண்மைதான் என்பதில் நிலைப்பட நெடுநேரம் தேவைப்பட்டது. அவன் பார்க்க — எதிரில் பல ஜோடிகள். பால் மணம் மாறாத பெண்ணெல்லாம் ஒருவனோடு போய்க் கொண்டிருந்தது. அவனும் புகைத்தபடியே நடந்து கொண்டிருந்தான்.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் எதை அடிப்படையாக வைத்து ஒருவரோடொருவர் இப்படி ஈர்ப்புக் கொள்கின்றார்கள் என்பதே குழப்பமாகத்தான் இருந்தது

'சினிமாவிலும் தூக்கலான விஷயம் காதல்தான். கதைகள், நாவல்களிலும் அதே மண்ணாங்கட்டிதான். அதனாலேயே இன்றைய இளைய சமுதாயமும் பாதிக்கப்பட்டு காதலிப்பதற்காகவே பிறந்து விட்டதாக நினைக்கத் தொடங்கி விட்டதோ?'

சங்கர் தனக்குள் பலவாறாகக் கேட்டுக் கொண்டே சைக்கிளைக் கிளப்பினான். திரும்பித் திரும்பி வேறு பார்த்தான். அவனறிய ஒரு காதல் ஜோடிகூட உருப்பட்டதில்லை. அதிகபட்சம் ஒரு காதல் ஜோடி ஆறுமாதம் சேர்ந்து வாழ்ந்தது. அதன்பின் அவர்களால் வாழ்க்கையை எதிர்கொள்ள முடியவில்லை.

எப்பொழுதும் பவுடர் பூசி வந்து ஆகாயத் தே
போலக் காட்சியளித்த காதலன் கல்யாணத்திற்குப் பி
யதார்த்தத்தில் வியர்வை உடம்புடன் நாற்றமடித்தா
காதலியும்கூட சவுரி முடி இல்லாமலும், பீளைக் க
களுடனும் காட்சி தந்தாள்.

மெல்ல மெல்லக் கவர்ச்சி கழண்டு கொண்ட

யதார்த்தம் முள்ளைப் போலக் குத்த ஆரம்பிக்க
தங்கள் தவறு இருவருக்குமே தெரிந்தது. இப்படி
பெண்ணுக்காகச் சாதி சனம் முதல் அப்பா அம்
அண்ணன் தங்கை வரை சகலரையும் தூக்கி எறி
முட்டாள் தனத்துக்கெல்லாம் முட்டாள் தனமா
தெரிந்தது. அவளும் அப்படியேதான் நினைத்தா
ஆனால் இல்லற வாழ்க்கையில் மிகவும் ஆழமா
புதைந்து போய்விட்டதால் அதிலிருந்தும் விடு
முடியவில்லை.

இன்று எரிச்சலும் குழப்பமுமாக அவர்கள் வாழ்க்
ஓடியபடி உள்ளது. வயிற்றில் குழந்தை வேறு உரு
விட்டது. அது பிறப்பதற்கு முன்பே அதற்கு ஒற்று
யில்லாத — ஆசாபாசம் இல்லாத பெற்றோர்கள். பி
பின்? நினைக்கவே நெஞ்சு நடுங்கியது.

இதில் இந்த ரமேஷும் தேன்மொழியும் எந்த ரக
போய்ச் சேருவார்கள் என்று தெரியவில்
பாண்டுரங்கன் பற்றி மதுரையில் எல்லோருக்கும் தெ

அவர் பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கிற
நகரில் பல கொலைகள் நடந்திருக்கின்றன. வைகைக் க
யோரமாகக் கொலையானவர்கள் பிணம் கிடப்ப
தகவல் வரும். பேப்பர்களிலும் செய்தி வரும்.

ஊருக்குள்ளும் 'எல்லாம் பாண்டுரங்கன் ஆ அது எந்த அ
வேலை' என்று பேசிக் கொள்வார்கள்.



உண்மை பொய் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். பெரிய மனிதர்களுக்கு எல்லாம் புகழ் மட்டும் சொந்தமில்லை. இப்படி வதந்திகளுக்கும் அவர்கள் பதில் கூறியாக வேண்டும்.

மொத்தத்தில் சங்கர் பலவிதமான குழப்பங்களோடு சைக்கிளை மிதித்தான். ஒன்று மட்டும் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. நிச்சயமாக ஒரு பெரிய விபரீதத்தை விரைவில் இந்த ஊர் மக்கள் பார்க்கப் போகிறார்கள்!

மறுநாள்! அதே காலை நேரம்...

பத்திரிகை வைக்க, விழா ஒன்றுக்குத் தலைமை தாங்க அழைக்க, புகைப்படம் எடுத்துக்கொள்ள என்று பாண்டு ரங்கன் வீட்டு முகப்பில் ஒரு கூட்டம். அந்த வெள்ளை தாடிக்காரரும் இருந்தார். அவரைப் பார்க்கவும் பி.ஏ.வுக்கு சுரீர் என்றது.

நேற்றுபோல அலட்சியமாய்ப் பார்க்க முடியவில்லை.

அவரிடம் ஏதோ விஷயம் இருப்பதுபோலத் தோன்றியது. அதனாலேயே அவரைப் பார்த்தவன் அவரிடம் என்ன விஷயம் என்றெல்லாம் கேட்காமல் நேரே பாண்டு ரங்கனிடம் தான் சென்றான்.

"சார்..."

"உம்..."

"வழக்கம்போல நிறைய பேர் வந்து காத்துக்கிட்டி ருக்காங்க..."

"அதுக்கென்ன...?"

"அதுல..."

"அதுல...?"

"நேத்த வந்து உங்களுக்கு..."

"என்னய்யா சொல்ல வர்றே?"

"இல்ல சார்... ஒரு வெள்ளைத்தாடி வெச்ச சாமியார் மாதிரி ஒருத்தர்கூட நேத்து வந்து நீங்க திரும்பி வந்துடு வீங்க; மதியம் எதுவும் சாப்பிடமாட்டீங்கன்னுல்லாம் சொன்னார்னு சொன்னேனே..."

"அந்த தாடிக்காரர் வந்துருக்காராக்கும்?"

"ஆமாம் சார்..."

"இன்னிக்கு என்ன சொல்லப் போறாராம் அந்த ஆள்...?"

"நான் எதுவும் கேட்கல சார்..."

"ஏன்... இன்னிக்கும் என்ன உளறப் போறேன்னு கேக்க வேண்டியதுதானே?"

"சார்..."

"போய்யா. போய் ஆக வேண்டியதைப் பார். உழைச்சி நான் முன்னுக்கு வந்தவன். மந்திரத்துலல்லாம் மாங்கா காய்க்காது. போ... போய் என்ன விஷயம்னு கேட்டு அந்த ஆளை அனுப்பு. நீ சொல்றதப் பார்த்தா டொனேஷன் கேட்டு வந்திருக்கற நபரா இருக்கணும்.

எனக்கு ஆன்மிகத்துல நம்பிக்கை இல்லேங்கறத அந்த ஆளுக்குச் சொல்லு. இல்லே ஏதாவது அனாதை இல்லம் அப்படி இப்படின்னா செக்ஷன் 80 பி படி டேக்ஸ் அவாய்ட் பண்ணிக்க வழி இருக்கான்னு பார். இருந்தா ஆடிட்டர் கிட்ட பேசு. அவர் மத்த விசயங்களை பார்த்துக்குவார்..." பாண்டுரங்கன் ஒரே போடாக போட்டு பி.ஏ.வைத் திருப்பி விட்டார். இருந்தும் அவனிடம் நேற்று தென்பட்ட அந்த வேகம் இல்லை. காத்திருக்கின்றவர்களிடமும் கொஞ்சம் பணிவாகவே பே



ஒவ்வொருவரையும் உள்ளே அனுப்பி வைத்தான். இறுதியாக அந்த தாடிக்காரரிடம் வந்தான்.

"நீங்க வந்துருக்கற விசயத்தை சார்கிட்ட சொன்னேன். பாக்க விருப்பமில்லைன்னுட்டார். ஏன்னா அவருக்கு ஆன்மிகத்துல நம்பிக்கை கிடையாதுங்கறது ஊருக்கே தெரியும்..." என்றான்.

"நான் எதுக்கு வந்துருக்கேன்கறதே தெரியாம அவர் எப்படி இப்படிப் பேசலாம்...?" என்றார் அவரும்.

"என்ன... ஏதாவது அனாதை ஆஸ்ரமம் நடத்தறீங்களா? அதுக்கு டொனேஷன் வேணுமா?"

"தம்பி... நான் வாங்க வரலை. கொடுக்க வந்துருக்கேன்." — அவர் அதிர்ச்சியளித்தார்.

"கொடுக்கவா...? எங்க எம்.டிக்கா...?"

"ஆமாம். எதைன்னு நீ கேக்கலையே..."

"எதை?"

"எனக்குச் சொந்தமான இடத்தை..."

"இடத்தையா?"

"ஆமாம்... உங்க பாடி பில்டிங் ஃபேக்டரிக்குப் பக்கத்துல ஒரு பத்து சென்ட் இடம் இருக்கு இல்லயா?" — அவர் கேட்கவும் பி.ஏ.வின் முகத்தில் ஒரு புது வெளிச்சம்.

"ஆமாம்... அந்த இடத்தை எப்படியாவது வாங்கி அங்க ஒரு வாட்டர் வாஷ் சென்டரைப் போடணும்னு எங்க எம்.டி. ரொம்ப ஆசைப்பட்டார். அது உங்க இடம்தானா?"

"ஆமாம்..."

"இதை ஏங்க நேத்தே என்கிட்ட சொல்லலை. இருங்க வர்றேன்." பி.ஏ. திரும்பி வேகமாக உள்ளே ஓடினான். ஒரு பத்து நிமிடத்தில் திரும்பி வந்தான்.

"வாங்க. சார் கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்.." — என்றபடியே அவரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். பாண்டுரங்கன் ஆபீஸ் ரூம் ஒன்றின் முன் காத்திருந்தார். வந்திருப்பவரிடம் தனக்குக் காரியம் ஆக வேண்டும் என்பது தெரிந்த நிலையில் அப்படியே பாண்டுரங்கனின் அணுகுமுறை தலைகீழாக மாறிவிட்டது.

"வணக்கம், வாங்க..." என்று கை கூப்பி வரவேற்றார். உள்ளே அழைத்துச் சென்று அமர்த்தினார். எதிரில் அமர்ந்து கொண்டார். முகத்தில் கொஞ்சம்போலப் புன்னகை. பக்கத்தில் சுவரில் பாண்டுரங்கனின் தந்தை படம். அதற்கு மாலை போடப்பட்டிருந்தது. சிவப் பழமாகப் புகைப்படங்களில் தெரிந்தார்.

அந்த தாடிக்கார மனிதர் அந்தப் படத்தைப் பார்த்தார். பின்"தாமோதரன் எனக்கு நல்ல பழக்கம். நானும் அவனும் அஞ்சாம் வகுப்பு வரை ஒண்ணா படிச்ச பால்ய ஸ்னேகிதங்க," என்றார். அதைக் கேட்ட பாண்டுரங்கனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"அப்ப நீங்க அப்பாவோட நண்பருங்களா?"

"ஆமாம்..."

"உங்க பேர்?"

"என் பேர் தியாகராஜ சுந்தரம்."

"நான் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. அப்பாவுக்கு இப்படி ஒரு நண்பர் இருக்கறதே எனக்குத் தெரியாமப் போயிடிச்சு."



"உங்கப்பா இறந்தப்ப கூட நான் வந்துருந்தேன். அப்ப நீங்க அஞ்சு வயசுப் பிள்ளை. ஞாபகத்துல இருக்க வாய்ப்பு இல்ல."

"ஓ.. அப்படிங்களா.. இப்படிப்பட்டவங்களைக் காக்க வெச்சுட்டேன். மன்னிச்சுக்குங்க."

"பரவால்ல தம்பி. அப்பாவுக்குப் பிள்ளை தப்பாம அதே பேரோட இருக்கீங்க. மதுரைல உள்ள முதல் பத்து பேர்ல நீங்களும் ஒருத்தர்னா அது எவ்வளவு பெரிய விஷயம்!"

"உண்மைதான். என்ன சாப்பிட்றீங்க?" பாண்டுரங்கன் உபசரிப்பில் இறங்கவும் பி.ஏ. கூசிப்போனான்.

இவ்வளவு தூரத்துக்கு நெருங்கிய தொடர்புடைய ஒருவரை மிக அலட்சியப்படுத்திப் பேசிவிட்டோமே என்று வருத்தப்படவும் செய்தான்.

"யோவ் கைலாசம்... அய்யாவுக்கு ஒரு காபி எடுத்துகிட்டு வாய்யா..." — பாண்டுரங்கன் ஆர்டர் செய்தார்.

"இல்ல தம்பி... நான் வானப்ரஸ்தம் வாங்கிட்டவன். கிட்டத்தட்ட ஒரு சன்யாசி. ஆகையால இந்த காபி டீ எதுவும் வேண்டாம்..."

"ஓ... அப்படிங்களா சேதி... போகட்டும். பால் குடிக்கலாமே...?"

"அது சாப்பிட்லாம். சொல்லுங்க."

பி.ஏ.வும் ஒதுங்கினான். அவன் பெயரும் கைலாசம் என்பதைத் தியாகராஜ சுந்தரம் என்கிற அவரும் அறிந்து கொண்டவராய்ப் பாண்டுரங்கனைப் பார்த்தார்.

"அப்புறம்?"

"உனக்கு என் இடம் தேவைன்னு கேள்விப் பட்டேன்."

அது உங்க இடம்தானா?"

"அப்ப அது உங்க இடம்தானா?"

"ஆமா... நீ அனுப்பினதா புரோக்கருங்க வந்து பேசி னாங்க. ஆனா அவனுங்க அணுகின விதம் எனக்குப் பிடிக்கலை. அதே சமயம் ஒரு ஆறுமாச காலம் நான் இமயமலை பக்கமாய் இந்த அமர்நாத், ஹரித்வார், கங்கோத்ரின்னு எல்லா ஊருக்கும் யாத்திரை போயிட் டேன்..."

"ஓ... அதனாலதான் அந்த இடம் விஷயமா அவங்க ளால எனக்கு ஒரு சரியான பதிலைச் சொல்ல முடியலையா?"

"ஆமாம். இரண்டு நாள் முந்திதான் திரும்பி வந்தேன். வந்த உடனே திரும்பவும் வந்துட்டாங்க. அப்படியே இடத்துப் பக்கம் போய்ப் பார்த்தா அங்கே கட்டிட வேலை எல்லாமும் நடந்துகிட்டிருந்தது. எனக்குத் தூக்கி வாரிப் போட்டுச்சு..."

"அது நம்ம பசங்க உங்கள சமாதானப்படுத்திட லாம்கற நம்பிக்கைல அப்படி செய்துட்டாங்க. இப்ப தான் நீங்க நமக்கு ரொம்ப வேண்டப்பட்டவர்ங்கறதே தெரிஞ்சு போச்சு. எனக்கு இனிப்பிரச்சினை இல்லை..."

"உன்கிட்ட இருக்கற பணத்துக்கு ஒரு கிராமத் தையே விலைக்கு வாங்கலாம். இருந்தும் என்னோட பத்து சென்ட் உனக்கு ரொம்ப அவசியமாப் பட்றதுதான் ஆச்சரியமா இருக்கு."

"இதுல ஆச்சரியப்பட என்னய்யா இருக்கு? என் பாடி பில்டிங் ஃபேக்டரிக்குப் பக்கத்துல உங்க இடம் இருக்கு. வண்டிய வாஷ் பண்ண அப்படியே பக்கமா இருந்தா கொண்டு போறது சுலபம். இது ஒரு இடம், அது ஒரு இடம்னு இருந்தா பெட்ரோல் செலவு, அப்புறம்



அங்க ஒரு ஆபீஸ், இங்க ஒரு ஆபீஸ்னா எவ்வளவு செலவு பாருங்க..."

"வாஸ்வதம்தான். ஆனா அணுகுமுறை ரொம்ப முக்கியம். அது உங்க ஆட்கள்கிட்ட இல்லாமப் போயிடிச்சு. அதான் வருத்தமாயிடிச்சு."

"அதவுடுங்க... இனி எல்லாம் சரியாயிடும். அந்த இடத்துக்கு நீங்க என்ன விலை சொல்றீங்க...?" பாண்டு ரங்கன் நேராக விஷயத்துக்கு வந்தார். பி.ஏ. கைலாசமும் கையில் பால் டம்ளருடன் வந்து சேர்ந்தான்.

"சாப்பிடுங்க..."

"இருக்கட்டும் தம்பி. எனக்கு இந்த இடத்துக்கு விலை எல்லாம் வேண்டாம். நான் சும்மாவே தந்துட்றேன். ஆனா..." பெரியவரான தியாகராஜ சுந்தரம் சற்று இழுத்தார்.

"என்ன இழுக்கறீங்க... பதிலுக்கு நான் என்ன செய் யணும்? பணம் வேண்டாம்னா வேற என்ன வேணும்?"

"அது உனக்கு ஒண்ணும் பெரிய விஷயமில்லதான். இருந்தாலும்..."

"அட என்ன நீங்க பூசி மெழுகிகிட்டு... பளிச்சுன்னு சொல்லுங்க."

"நீ சாமி கும்பிட்றது கிடையாது. உனக்குக் கடவுள் பக்தி கிடையாதுங்கறது எனக்கும் தெரியும்."

"அதான் உண்மை. என்வரைல என்புத்திதான் கடவுள். உழைப்புதான் அருள்..."

பெரியவர் தியாகராஜ சுந்தரம் பாண்டுரங்கன் பதிலைக் கேட்டுச் சிரித்தார்.

"என்னய்யா சிரிக்கிறீங்க? சினிமா டயலாக் மாதிரி இருக்குதாக்கும்?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல... கடவுள்ங்கறவர் பல வடிவங்கள்—பல குணங்கள் உடையவர். நீ சொன்ன மாதிரியே புத்தியிலயும் கடவுள் இருக்கார். உழைக்கற சக்தியாவும் அவர்தான் இருக்கார்.

ஆனா ஒரு அடிப்படைக் கொள்கை நமக்குன்னு உருவாகிட்ட பிறகு கடைசி வரை அதுல மாறாம இருக்கணும். அது ரொம்ப முக்கியம்." பெரியவரின் பதிலால் பாண்டுரங்கன் அதிக ஆச்சரியப்படுவது அவர் முகத்தை வைத்துத் தெரிந்தது.

"நீங்க இப்படி ஒரு பதில் சொல்வீங்கன்னு நினைக்கல. என் அம்மாவுக்கு நான் இப்படி இருக்கறதுல ரொம்ப வருத்தம்."

"அவங்க பக்திமயமானவங்க. பக்திதான் ஒரு மனுஷனை சமயத்துல காப்பாத்தும்னு நம்பறவங்க. அதனால உனக்கு ஒரு கேடு வந்துட்டா என்ன பண்றதுன்னு பயந்துகிட்டு அவங்க அப்படி நினைக்கலாம்."

"நீங்க பேசறதப் பார்த்தா பக்திமான்களுக்கு ஆபத்தே வராதுங்கற மாதிரி தெரியுதே..."

"தப்பா புரிஞ்சுகிட்டே... ஆபத்து வரும். வந்தாலும் அதுல அவன் திடமா இருந்து இது கடவுள் வைக்கற சோதனைன்னு நினைச்சு நேர்மையான வழியில அதை சந்திச்சு அதுல இருந்து தப்பிக்க முயற்சி செய்வான்."

"அப்ப என்னை மாதிரி நபர்கள் நேர்மையான வழியில முயற்சி செய்யமாட்டோமா?"

"இப்படி சொன்னா அப்படியான்னு திருப்பிக் கேட்கக் கூடாது. நீ என் வரைல எப்படி நடந்துகிட்டேன்னு நினைச்சுப்பார். அது நேர்மையான வழியா?"

"ஐயா... இன்னிக்குச் சில விஷயங்கள் கொஞ்சம் வேகமாகவும் தடாலடியாவும்தான் பண்ண வேண்டி



யிருக்கு. அதான் வியாபாரம். இப்படிப் பண்ணத் தெரியாட்டி பிரயோஜனமில்ல. நீங்க விஷயத்துக்கு வாங்க. இடத்தை சும்மாவே தர்றேன்னீங்க. ஆனான்னு இழுத்தீங்க... நான் என்ன செய்யணும் சொல்லுங்க..."

"உங்க வீட்ல பூஜை அறை இருக்குதுல்ல..."

"ஏன் இல்லாம... எனக்கு பக்தி இல்லாட்டியும் என் மகளுக்கு இருக்கு... மனைவிக்கு இருக்கு. தொண்ணூறு வயசுலயும் எங்கம்மாவுக்குத் தினமும் கண்ணுல கற்பூர ஆரத்திய ஒத்திக்கணும். இல்லாட்டி என் மனைவியைத் தொணப்பி எடுத்துடும்."

"சந்தோஷம். அந்த பூஜை அறைல ஒரு யந்திரம் ஒண்ணு இருக்கணுமே..."

"யந்திரமா... அப்படின்னா?"

"யந்திரம் தெரியாதா... செப்புத்தகட்டுல கோலம் மாதிரி போட்டு மந்திர வார்த்தை எல்லாம் எழுதியிருக்குமே..."

"ஓ... செப்புத்தகடா...? ஆமா! ஏதோ ஒண்ணு உள்ள கிடக்கற மாதிரிதான் தெரியுது. ஆனா பளிச்சுன்னு ஞாபகத்துக்கு வரலை."

"அதுதான் எனக்கு வேணும்!"

பெரியவர் யந்திரத்திடம் வந்து நின்றார். பாண்டுரங்கனும் திகைப்புடன் பார்த்தார்.

"என்னப்பா..."

"இல்ல... அந்தத் தகடு எதுக்கு உங்களுக்கு?"

"அது உங்கப்பாவும் நானும் ஒரு சாமியாரைக் கும்பிடப் போனப்ப அவர் கைப்பட செய்து தந்தது."

"சரி... அதை வெச்சுகிட்டு என்ன பண்ணுவீங்க? அதுவா உங்களுக்குச் சோறு போடும்?"

"அது அட்சய பாத்திரம் தம்பி. உனக்குத் தெரியாது இந்த உலகத்துல இருக்கற எதைக் கேட்டாலும் அதை அது தரும்."

"வேண்டா. இதுக்கு மேல நீங்க எதுவும் பேசாதீங்க அப்புறம் நான் எதையாவது சொல்லி நீங்க பதிலுக்கு ரொம்ப வருத்தப்பட வேண்டியிருக்கும்..."

"நீ எதைச் சொன்னாலும் நான் வருத்தப்பட மாட்டேன். இந்த உலகத்தைப் பத்தியும், வாழ்க்கையைப் பத்தியும் தெரிஞ்சவங்க பேசினாலே நான் கோபிக்க மாட்டேன். இதெல்லாம் எதுவும் தெரியாத நீ பேசித் தானா எனக்கு வருத்தம் வரப்போகுது...?"

"அப்ப நான் ஒரு எழவும் தெரியாதவனா...?" பாண்டுரங்கனிடம் கோபத் திவலை.

"எல்லாரும் எல்லாமும் தெரிஞ்சவங்க இல்ல தம்பி நான் அந்த அர்த்தத்துல சொன்னேன்..."

"உங்களப் பார்த்தா அழுவறதா சிரிக்கறதான்னு தெரியல..."

"நீ என்ன வேணா செய்துக்கோ. அப்படியே அந்த யந்திரத்தை மட்டும் கொடுத்துடு. மறு நிமிஷம் என் நிலப் பத்திரம் உன் கைக்கு வந்துடும். அப்புறம் நீ பத்திரம் பதியற அன்னிக்கு ரிஜிஸ்தர் ஆபீசுக்கு வந்து நான் கையெழுத்து போட்டும் கொடுத்துட்றேன்."

"நிஜமாத்தான் சொல்றீங்களா?"

"சத்யமாவும் சொல்றேன்."

"நல்லா யோசிச்சுக்குங்கய்யா... உங்க இடத்துக்கு சென்ட்டுக்கு ஒரு லட்சம்னு பத்து சென்ட்டுக்குப் பத்து லட்சம் தர நான் தயாரா இருக்கேன்."

"பணம்லாம் வேண்டாம்பா. நான் பார்க்காத பணமா எனக்கு அந்த யந்திரம் மட்டும் தா, போதும்."



"ஆனா பத்து லட்சம் தந்ததா நான் பத்திரம் பதிவு பண்ணுவேன். பரவால்லியா?"

"தாராளமா..."

"அப்ப டீல் முடிஞ்சிடுச்சு... நீங்க பாலைக் குடிங்க..."

அவரும் பாலைக் கையில் எடுத்தார். மளமளவென்று குடித்தார். வெறும் கண்ணாடி டம்ளரைக் கீழே வைத்தார். கைகளை உயர்த்தி ஒரு கும்பிடும் போட்டார்.

"அப்ப நான் புறப்பட்றேன்... யந்திரத்தை நான் எப்ப எதிர்பார்க்கலாம்."

"எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்ல. இன்னிக்கே இப்பவே கூட தரேன்..."

"அப்ப தாயேன். நானும் என் நிலப்பத்திரத்தைக் கொண்டுகிட்டுதான் வந்துருக்கேன்..."

அவர் எழுந்து நின்றபடியே இடுப்புப் பகுதியில் இருந்து பத்திரத்தை உருவி வெளியே எடுத்தார். பி.ஏ. கைலாசத்திற்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. வாஸ்தவத்தில் அவன் பார்த்தபோது அவர் இடுப்பில் எதுவுமே தெரியவில்லை... இப்பொழுது மட்டும் எப்படி?

அவன் யோசித்தபடி இருக்கும்போதே பாண்டுரங்கன் அங்கிருந்து கிளம்பினார்.

பூஜை அறைக் கதவு மூடியிருந்தது. கதவு முன் நின்ற பாண்டுரங்கனை வீல்சேரில் அமர்ந்திருந்த நிலையில் அவர் தாயும் பார்த்தாள். ஆச்சரியப்பட்டாள்.

அவரோ கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். பெரிய மரக்கோபுரம். கீழே நான்கு கால்கள். நடுவில் மண்டபம். நடுவில் அம்பாள் விக்ரகம். சுற்றிலும் சுவர்களில் ஸ்வாமி படங்கள். கும்மென்ற தசாங்க வாசம். விளக்குகளும் எரிந்தபடி இருந்தன.

அந்த யந்த்ரம் சந்தனம் குங்குமம் வைக்கப்பட்டு அம்பாள் முன் காலடியில் சாய்ந்த நிலையில் கண்ணில் பட்டது. அதை நெருங்கியவர் குனிந்து கைகளில் எடுத்த படியே திரும்பினார். அப்படியே உற்றுப் பார்த்தார். அதற்குள் அதிசயமாக அவர் பூஜை அறைக்குள் நுழைந் ததைப் பார்த்துவிட்டு அவர் மனைவி வந்துவிட்டிருந்தாள்.

"என்னங்க பண்றீங்க?"

"ஒண்ணுமில்ல ஆனந்தி..." — என்றவர் அந்த யந்திரத் தகட்டுடன் அவளைத் தாண்ட முயல,

"என்னங்க இது... கைல யந்திரத் தகட்டை எடுத்துகிட்டு எங்க போறீங்க?"

"அய்ய, அதெல்லாம் உனக்கு எதுக்கு...? நம்ம ஊட்ல சும்மா கிடக்கற தகட்டுக்கு ஒருத்தர் பத்து சென்ட் இடத்தைத் தரேன்னு சொல்றாரு. அதான்..."

"அப்ப இதைத் தூக்கிக் கொடுத்துடப் போறீங்களா?" ஆனந்தி அப்படிக் கேட்கவும் அதற்குமேல் அவளிடம் வார்த்தைகளில் பேசப் பிரியமில்லாதவர் போல ஆமோதிப்பு பாவனையை முகத்தில் காட்டினார்.

"வேண்டாங்க... இது ரொம்ப ராசியான தகடுங்க..."

"அப்படியா?"

"உங்களுக்கு நம்பிக்கை இல்லாட்டியும் எங்களுக்கு இருக்குது. உங்கப்பா இதைத்தான் வெச்சு தினசரி பூஜை செய்வாரு."

"அவருக்குப் பூஜை செய்யணும்னு தோணிச்சு, செஞ் சாரு. எனக்கு இதை விக்கணும்னு தோணுது, விக்கறேன்."

"இல்லீங்க... எப்பவும் இந்த மாதிரி பரம்பரை பரம்பரையா வர்ற விஷயங்களை மட்டும் எவ்வளவு கஷ்டத்துலையும் விக்கக் கூடாதுங்க..."



"நான் ஒண்ணும் இதைக் கஷ்டத்துக்கு விக்கல. என் இஷ்டத்துக்குதான் விக்கறேன்."

"எதுக்காகவும் இதை நாம இழக்கக் கூடாதுங்க. இதை நான் பூஜை செய்யவும்தான் நமக்கு மகள் பிறந்தா..."

"விட்டா இந்தத் தகடுதான் நீ இன்னிக்கு சோறு திங்கவே காரணம்னு சொல்வே போல இருக்கே."

"அப்படிச் சொன்னா தப்பில்லீங்க..."

"உன்னை ஓங்கி ஒரு அறை அறைஞ்சாலும் தப்பு கிடையாது. என் கடுமையான உழைப்பால நாம முன் னுக்கு வந்துருக்கோம். அதை எல்லாம் யோசிக்காம இந்தத் தகட்டைக் காரணமா சொல்றியே... இனி ஒரு வார்த்தை நீ பேசினாலும் அடி விழும். அப்புறம் 'பிரபல தொழி லதிபர் மனைவியை அறைந்தார்'னு பத்திரிகைல செய்தி வரும். தேவையான்னு யோசிச்சுக்க..." என்று அவர் ஆனந்தியைச் சமாளித்து முடித்துவிட்டு காலெடுக்க, சக்கர நாற்காலியை இழுத்துக் கொண்டு அவரது தாய் முன்னாலே வந்தாள். பூஞ்சைக் கண்களால் பாண்டு ரங்கனை ஒரு மாதிரி பார்த்தாள்.

"இப்பதான் அவ ஒப்பாரியை முடிச்சா... அடுத்து நீ ஆரம்பிக்கப் போறியாம்மா...?"

"நான் ஆரம்பிச்சாலும் கேக்கறததானே கேப்பே. இது வந்து வாழ்ந்ததைப் பார்த்துட்டேன். இது போய் அதனால என்ன நடக்குங்கறதையும் பாத்துட்றேன், நீ போ..." அவள் பேச்சு நச்சென்று இருந்தது. பாண்டுரங்கனே அதை எதிர்பார்க்கவில்லை என்பது அவர் முகம்போன போக்கில் தெரிந்தது. சில வினாடிகள் நின்று வெறித்த பாண்டுரங்கன், யந்திரத் தகட்டுடன் அங்கிருந்து புறப் பட்டார்.

யந்திரத் தகட்டைக் கையில் வாங்கிப் பார்த்த பெரியவர் தியாகராஜ சுந்தரத்துக்கு ஒரே சிலிர்ப்பாகி விட்டது. கண்களில் ஒற்றிக் கொண்டார். பாண்டு ரங்கன் ஒரு மாதிரி சிரித்தார். ஆனால் தியாகராஜ சுந்தரம் அதைக் கண்டு கொள்ளவில்லை. "உங்கள நினைச்சா எனக்குச் சிரிப்புதான் வருது," என்று ஆரம்பித்தார் பாண்டுரங்கன்.

"இதையே எத்தனை தடவை சொல்லுவே?"

"நூறு தடவைகூட சொல்லலாம். பத்து சென்டு நிலத் துக்கு இந்த ஒன்றையணாகூடப் பெறாத செப்புத் தகட் டைப் போய் வாங்கிக்கற உங்களை நினைச்சா சிரிக்காம என்னத்தப் பண்றது?" தியாகராஜ சுந்தரம் பதிலுக்குச் சிரித்துவிட்டு எழுந்து கொண்டார். நின்றபடியே, "நல்லது பாண்டுரங்கா... எனக்குத் தேவையானது கிடைச்சாச்சு. உனக்குத் தேவையானதை நானும் கொடுத்துட்டேன். ரிஜிஸ்தர் ஆபீசுக்கு மட்டும் எப்ப வரணும்னு சொல்லு. வந்து கையெழுத்து போட்டுத் தந்துட்றேன். கவனமாவும் இருந்துக்க..." என்றபடியே திரும்பி நடக்கத் தொடங்கி னார். அவர் புறப்பட்டவரை எல்லாமே சரி... ஆனால் இறுதியாக 'கவனமா இருந்துக்க' என்று மட்டும் எதனால் சொன்னார் என்பதைப் பாண்டுரங்கன் யோசிக்கவில்லை. ஆனால் பி.ஏ. கைலாசம் மட்டும் யோசிக்க ஆரம்பித்தான்!

## 4

சப்தத்தில் இருந்து வந்ததுதான் மொழி. இந்த மொழியில் இருந்து வந்ததுதான் மந்திரம். மனத்துக்குத் திறம் தருவதால் மந்திரம் என்றார்கள். இந்த மந்திர சப்தத்தை வாய் வழியாகப் பிறர் காதுகளில் உபதேசித்து அப்படியே காலங்காலமாகத் தொடரலாம்.



அப்படிப் பல மந்திரங்கள் உள்ளன. அதாவது எந்த மொழியிலும் எழுதி வைக்காமல், கல்வெட்டுக்களில் பதிவு செய்யாமல் மனதில் நமக்குள்ளேயே வைத்துக் கொண்டு நாம் பிறருக்கு நம்குரல் மூலமாக உபதேசிப்பது என்பது அது...

இப்படிப்பட்ட மந்திரங்களை எழுத்தில்லாத அதாவது அட்சர வடிவம் காணாத மந்திரங்கள் என்பர். அப்படிப் பல மந்திரங்கள் காது விட்டுக் காது தாவியே இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. குரு மூலமாக உபதேசம் பெற வேண்டிய மந்திரங்கள் என்றும் இதைக் கூறுவார்கள்.

இப்படி அகத்தியர் உபதேசித்த மந்திரமும், விசுவா மித்திரர் உபதேசித்த மந்திரமும் காதுவிட்டுக் காது என்று தாவித்தாவியே இன்னும் பலர் மனங்களில் வாழ்ந்தபடி உள்ளன.

அட்சரமில்லா மந்திரங்களுக்கு உச்சரிக்கும் விதம்தான் கணக்கு. ஸ்பஷ்டமாக மிகச் சரியாக உச்சரிக்க வேண்டும். தவறாக உச்சரித்தால் எதிர்விளைவுகள் உண்டாகிவிடும்.

நம் பேச்சிலேயே பாவனை என்பது மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. 'ஹூம்... எல்லாம் என் தலையெழுத்து...!' என்கிற நான்கு வார்த்தைகளை எழுத்தில் படிக்கும்போது ஆளுக்கு ஆள் அவரவர் மனப்பாங்கிற்கு ஏற்பப் பொருள் கொள்வார்கள். அதாவது ஒருவர் மிக மனம் நொந்துபோய் சோகத்தில் சொல்லும் வார்த்தைகளாகவே இதை நினைக்க முடியும். ஆனால் சிலர் சில கேலியான தருணங்களிலும் இப்படி முணு முணுப்பார்கள். சிரித்துக் கொண்டுகூட சிலர் முணுமுணுப்பர். எழுத்தில் படிக்கும்போது உணர்ச்சி தெரியவராது. இதையே காதாரக் கேட்கும்போது உணர்ச்சியோடு சேர்ந்து கேட்பதால் மிகச் சரியாக நாம் அர்த்தம் கொள்வோம்.

இதிலிருந்து எழுதி வைக்கும்போது பாவனை என்பதும் உணர்ச்சி என்பதும் அதில் இருக்க வாயப்பில்லை என்பது விளங்கும். அதனாலேயே சில மந்திரங்களை எழுத்தில்

வைத்தால் அதைப் படிப்பவர்கள் தங்கள் நாக்கின் வசதிக்குப் படித்துவிடும் அபாயம் உள்ளது. அதில்தான் மந்திரம் சிதைகிறது. இதே மந்திரத்தைக் காதில் உரிய முறையில் உச்சரிக்கும்போது கேட்பவர் ஏற்ற இறக்கம் வரை சகலத்தையும் துல்லியமாக அறிந்து கொண்டு அதை அப்படியே பின்பற்றுவர்.

மந்திரத்தைச் சொன்னால் போதாதா...? அதில் ஏற்ற இறக்கங்கள் இருந்தால் அது ஒரு பிழையா என்று கேட்டால் அதைப் பெரும்பிழை என்கிறது மந்த்ர சாஸ்த்ரம்.

'சாப்பாடு போடப்படும்' என்கிற இரு வார்த்தைகளை ஒருவன் சாப்பா –டுப்போ– டப்ப–டும்' என்று உச்சரித்தால் கேட்பவர்களுக்கு உரிய பொருள் சேருமா?

எனவேதான் மந்திரங்கள் உச்சரிப்பதில்தான் அதன் சிறப்பு உள்ளது.

இந்த மந்திரங்களில் மூன்று விதங்கள் உள்ளன. 'அட்சராந்தக மந்த்ரங்கள், அட்சராப்ய மந்த்ரங்கள், பீஜ மந்த்ரங்கள்' என்பவையே அவை.

இதில் பீஜ மந்த்ரங்கள் என்பவை அழுத்தமாக உரிய கால நேரத்தில் எழுதப்பட்டவையாக இருக்கும்.

சொர்ணத் தகடு, செப்புத் தகடு என்று உலோகங்களில் இவை எழுதப்பட்டிருக்கும். இதை எழுதுவது ஒரு பெரிய கலை. இப்படி எழுதப்பட்ட மந்திரங்கள் மேல் தீப ஒளி படும்போது அவை அப்படியே எதிரொலிக்கும்... அதாவது பிரதிபலிக்கும். தியேட்டரில் சினிமா ஸ்லைடுகளில் வெளிச்சம் படும்போது எழுதப்பட்ட எழுத்தின்மேல் வெளிச்சம் ஊடுருவாது. அந்தப் பகுதி அப்படியே திரையில் கறுப்பாக எழுத்தாக விழுந்து நாம் வாசிக்கின்றாற்போல, இதுவும் இது உள்ள இடத்தில் சில பிரதிபிம்பங்களை உண்டாக்குகிறது. இதை நாம் நம் கண்களால் உணர முடியாது. ஆனால் இந்த



பிம்பங்கள் அது இருக்கும் சூழலில் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மொத்தத்தில் அங்கே ஒரு இயக்கம் நம்மால் உணர முடியாத அளவில் உருவாகிறது. இப்படி இயக்கத்தை உருவாக்குவதாலேயே இயந்திரம் என்று இது காரணப் பெயர் பெற்றது.

நாம் உண்ட உணவு வயிற்றில் பல மாறுபாடுகளை அடைந்து ஜீரணமாகிறது. இந்த அரைவையைப் பெரும்பாலும் நாம் உணர்வதில்லை. உள்ளே ஒரு பணி நடந்தபடி இருக்க புறத்தில் நாம் நமது பிற பணிகளைச் செய்கிறோம். எப்படி உள்ளே நடைபெறும் ஜீரணப் பணியை நாம் காண முடியாதோ அப்படித்தான் இந்த இயந்திரப் பணியும்.

மொத்தத்தில் இயந்திரம் என்பது மிகமிக நாகரிகமடைந்த மனித ஆற்றலின் ஒரு நுட்பமான கண்டுபிடிப்பு.

ஆனால் இதைச் சரியாக உணராமல் இதிலும் போலிகள் தோன்றி திருட்டு விசிடி போல இதைத் தயாரித்து விலைப்படுத்தி இதை ஒரு வர்த்தகப் பொருள்போல ஆக்கி ஏமாற்றங்களை அதனால் தோற்றுவித்து விட்டனர்.

தியேட்டரில் படம் முடிந்து விளக்குகள் எரியத் தொடங்கின. கடைசி வரிசையில் ஒரு மூலையில் இரண்டு சீட்களில் அமர்ந்திருந்த ரமேஷும் தேன்மொழியும் சோம்பல் முறித்தபடி மெல்ல நடந்து வெளியே வந்தனர்.

தேன்மொழி முகத்தில் இறுக்கம்.

ரமேஷ் மட்டும் பேச்செடுத்தான்.

"தேனு– படம் பாத்துருப்பே. லவ் பண்ணா எவ்வளவு கஷ்டம்னு தேங்கா உடைக்கற மாதிரி சொல்லிட்டாங்க. நாளைக்கு நாம ரெண்டு பேரும் ஓடிப் போனாலும் இதே மாதிரிதான் கஷ்டப்படுவோம். இதைப் பார்த்த பிறகும் உனக்கு என்னைக் காதலிக்கணும்னு தோணுதா?"

அவளும் உடனே அவனை ஒரு மாதிரி ஏறிட்டாள்.

"கேக்கறேன்ல... சொல்லு..."

"ரமேஷ்... இந்தப் பொண்ணு காதல்ல பட்ட கஷ்டத்தைவிட அதிக கஷ்டத்தை நான் எங்க வீட்ல இப்ப அனுபவிச்சுகிட்டு இருக்கேன். அது தெரியுமா உனக்கு?" அவள் பதில் ரமேஷை ஒரு சிலிர்ப்புக்கு மாற்றியது.

"என்ன தேன்மொழி சொல்றே நீ..."

"இதெல்லாம் ஒரு பக்கம். என் கதையே வேற. நாம சினிமாவுல பார்த்த ஜோடிகளுக்கு வந்த அதே மாதிரி கஷ்டம்தான் நமக்கு வரணும்னு இல்ல." — தேன்மொழி ஒரு நீண்ட பதிலளிக்கத் தயாரானாள். "சினிமாக் காரங்க அவங்க பிரியத்துக்குக் கதை எழுதிக்கறாங்க. ஆனா வாழ்க்கை அப்படிக் கிடையாது. சுருக்கமா சொல்லிக்கிறேன். எனக்கு என் வீட்டை சுத்தமா பிடிக்கல. என் அப்பா, என் அம்மா யாருமே சரியில்லை. என் அப்பாவுக்கு அந்தஸ்தும் பணமும்தான் பெருசு. அதுக்கு ஒரு கேடுன்னா, எதிர்த்து நிக்கறது பெத்த தாய் தகப்பனே ஆனாலும் கழுத்தை நெரிச்சுக் கொன்னு போட்ருவார். எங்கம்மா ஒரு வாயில்லாப் பூச்சி. கொஞ்சம்கூட தைரியம் கிடையாது. என்மேல எவ்வளவுதான் பாசம் இருந்தாலும் அப்பா பக்கம்தான் நிப்பாங்க. நானும் என் அப்பா விருப்பம் எதுவோ அதன்படிதான் நடந்துக்கணும். அவருக்கு முட்டை பிடிச்சா எனக்கும் பிடிக்கணும். அவருக்கு கோழி சூப் பிடிச்சா எனக்கும் பிடிக்கணும். அவருக்கு செந்தில்னு எங்க உறவுக்காரப் பையனைத்தான் ரொம்ப பிடிக்கும். அவன் கிட்ட வந்தாலே ஒரு பீடி நாத்தம். அவனைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்க ணும்னு என் அப்பா இன்னும் வாயைத் திறந்து சொல் லலை. அவ்வளவுதான். அவனோ இப்பவே கல்யாணம்



ஆயிட்ட மாதிரி என்மேல கண்ட இடத்துல கை போட்றான். 'அப்பாட்ட சொல்வேனடா நாயே'ன்னா 'உன் அப்பா அவர் வாலிப வயசுல இதைவிட மோசம்' கறான். இதுதான் என் குடும்ப நிலை. எனக்குச் சுத்தமா பிடிக்கலை. இதெல்லாம்தான் நான் உன்னை விரும்பக் காரணம்.

நீ பயப்பட்ற மாதிரி நாம ஒண்ணும் கஷ்டப்பட மாட்டோம். கேரளாவுல எனக்கு ஒரு தோழி இருக்கா. அவகூட நான் தினசரி செல்ஃபோன் மூலமா பேசறேன். நாம அங்கபோய் உடனடியாக் கல்யாணமும் செய்துக்கு வோம். அந்த ஊர் கிட்டத்தட்ட ஒரு தீவு மாதிரி. தேங்கா நார்ல கயிறு தயாரிக்கற கம்பெனி அங்க இருக்கு. அதுல ரெண்டு பேரும் வேலைக்கு சேருவோம். பொழுதும் போகும் — வாழ்க்கையும் நகரும்.

தப்பித்தவறி நாம தமிழ்நாட்டை, குறிப்பா நம்ம குடும்பங்களை நினைச்சுப் பார்க்க வேண்டா. உன்னை நான் தேர்வு செய்யக் காரணமே நீ அப்பா அம்மா இல்லாத நிலைல மாமா வீட்ல தங்கிப் படிச்சுகிட்டு வர்றவன்கறதாலதான்... உன் மாமாவும் பெருசா தேட மாட்டாரு. என் வீட்ல தேடினாலும் நாம அகப்பட மாட்டோம். எவ்வளவு நகை முடியுமோ அவ்வளவு நகை-எவ்வளவு பணம் முடியுமோ அவ்வளவு பணம் நான் கொண்டுகிட்டு வர்றேன். நாம நல்லவிதமா வாழ்ந்து பிள்ளையும் பெத்துகிட்டா அப்புறமா இந்த சினிமா எடுத்த டைரக்டரையும் போய்ப் பார்ப்போம்.

காதலிச்சா கஷ்டம்தான் மிச்சம்னு ஒரு படம் எடுத்த மாதிரி காதலிச்சா சந்தோஷமாவும் இருக்க முடியும்னு எங்களைப் பார்த்து தெரிஞ்சுக்கோன்னு சொல்வோம். என்ன சொல்றே?" தேன்மொழி மூச்சுவிடாமல் பேசி

அவள் முற்றாகப் பேசிய பிறகுதான் அவனுக்கே னாள். அவள் எதனால் தன்னைக் காதலிக்கிறாள் என்பது புரிந்தது. தான் அவளை மயக்கிவிட்டோம் என்பதெல் லாம் எவ்வளவு பெரிய பொய் என்பதை அவன் அந்த நொடியில் உணர்ந்து கொண்டு அதற்காக வருத்தப்படவும் செய்தான். சங்கர் கூறியதுபோல 'அவளை மயக்குமளவுக்கு தன்னிடம் எதுவும் இல்லையென்பதும் உண்மைதான்..' என்று அந்த யதார்த்தத்தையும் எண்ணியவன் அவளோடு சேர்ந்து கேரளாவரை ஓடப் போவதையும் எண்ணிப் பார்த்தான். இதனால் அவனிடம் அடப்பமான மௌனம்.

அவளும் புரிந்து கொண்டாள். அவன் இப்பொழுது தான் யோசிக்கிறான். யோசிக்கட்டும். அதுதான் நல்லது என்று மௌனமாக நடந்தபடியே அவனைத் தொடர்ந்தாள்.

இரவு நேரம்! சாலையில் இருள் புரளும் இடமாகப் பார்த்துப் பார்த்தே இருவரும் நடந்தனர். ஊருக்கு வெளியில் உள்ள தியேட்டர் அது. அவர்களைத் தெரிந் தவர்கள் அங்கே அவர்களைப் பார்க்க வாய்ப்புமில்லை. ரமேஷ் கிட்டத்தட்ட அவள் பேச்சால் குழம்பிப் போய் விட்டிருந்தான்.

'திருமணம் நடக்கும். அதன் பிறகு பெரியவர்கள் வேறுவழியில்லை என்று ஒப்புக் கொண்டு விடுவார்கள். பிறகு எந்த ராகவா பாடி பில்டிங் கம்பெனிக்கு வேலைக் குப் போகவேண்டும் என்று ஆசைப்பட்டோமோ அதற்குக் கிட்டதட்ட முதலாளியாகவே ஆகிவிடலாம்' என்றெல் லாம் அவனுக்குள் கனவுகள் உண்டாகியிருந்தன. அவை அவ்வளவும் நொறுங்குகிற மாதிரி தோன்றியது.

"என்ன ரமேஷ் எதுவும் பேசாம வர்றே... நான் சொன்னது உனக்கு அதிர்ச்சியா இருக்கா?"

"..........."



"ரமேஷ் உன்னைத்தான்... பேசு!"

"என்ன பேச தேன்மொழி. எனக்கு இந்த மதுரையை விட்டு பாஷை தெரியாத கேரளாவை நினைக்கவே என்னவோ மாதிரி இருக்கு. கேரளாக்காரங்களுக்கு தமிழ்நாட்டுக்காரங்கன்னாலே ஒரு இளப்பம். பாண்டிப் பசங்கன்னு கிண்டல் பண்ணுவாங்க."

"அப்போ..."

"எனக்குக் கொஞ்சம் டயம் கொடு. யோசிச்சுச் சொல்றேன்." அவன் அப்படி சொன்ன மறுநொடியே தன்னைக் கடக்கப் பார்த்த ஒரு ஆட்டோவைக் கை தட்டி அருகில் அழைத்தாள். அவனிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் அதில் ஏறி அமர்ந்து கொண்டு புறப்படச் சொன்னாள். அவள் கோபத்தை அப்படிக் காட்டுகிறாள் என்பதை ரமேஷும் புரிந்து கொண்டான். முதல் முறையாக மாட்டிக்கொண்டுவிட்ட மாதிரி ஒரு எண்ணம் அவனுக்குள்...

பாண்டுரங்கன் வீட்டு பங்களாவின் மொட்டை மாடி அங்கேயே ஒரு சோபா ஊஞ்சலைப் போட்டிருந்தார்கள். அதில் அமர்ந்து கொண்டு தீவிரமான சிந்தனையில் இருந்தாள் ஆனந்தி. பங்களா முகப்பில் ஆட்டோ வந்து நிற்கும் சப்தம் கேட்கவும் எழுந்து சென்று கீழே பார்த்தாள். தேன்மொழி இறங்குவது தெரிந்தது. விறுவிறு வென்று உள்ளே நுழைபவளைப் பார்க்கவும் ஒரு அச்சம்.

இப்பொழுதெல்லாம் தேன்மொழி அதிகம் பேசுவதே இல்லை. அவளிடம் ஒரு துணிச்சல் தெரிகிறது. நினைத்த நேரம் போகிறாள். வருகிறாள். தேன்மொழி பற்றிய கவலை யோடு கீழே இறங்கி வந்தாள்.

தேன்மொழி அவளுக்கான அறையில் அடைந்து கொண்டு கதவையும் தாழிட்டுக் கொண்டு விட்டிருந்தாள். அதைப்போய்த் தட்டினாள்.

"டொக்... டொக்..."

கதவைத் திறந்த தேன்மொழியும் தலைப்பின்னலை அவிழ்த்துப் பின்னிக் கொண்டிருந்தாள்.

"இவ்வளவு நேரமா எங்க போயிருந்தே?"

"..."

"உன்னைத்தானடி... வாயத் திறந்து பதில் சொல்லு."

"ட்யூஷனுக்கு..."

"தெரியும். நீ இப்படிப் புளுகுவேன்னு நல்லாத் தெரியும். நான் உன் ட்யூஷன் மாஸ்டருக்கு போன் பண்ணி கேட்டுட்டுதான் வரேன்..." ஆனந்தியை சற்று மிரட்சியுடன் பார்த்தாள் தேன்மொழி.

"உன் போக்கே சரியில்லை. இந்த நேரம் பார்த்து தானா உன் ஜாதகத்தை வேற நான் பாக்கணும்," ஆனந்தி புலம்பத் தொடங்கிவிட்டாள்.

"அம்மா... வாயை மூடு! நான் என் ஃப்ரெண்டோட சினிமாக்குப் போனேன். உன்கிட்ட பர்மிஷன் கேட்டா நீ அப்பாகிட்ட கேட்கணும்னு சொல்வே. அவர் உடனே விசிடி வாங்கித் தர்றேன் வீட்ல பாத்துக்கோன்னு சொல்வார். இல்லாட்டி அந்த செந்திலைக் கூட்டிகிட்டுப் போகச் சொல்வாரு. அதான் நானா போய்ட்டு வந்துட்டேன்."

"இப்ப மட்டும் உங்கப்பா சும்மா இருப்பாரா?"

"நீ சொன்னாதானே அவரும் ஏதாவது பேசுவாரு. நீ எதுவும் சொல்லாதே. ஒரு பிரச்சினையும் இல்ல."

"அய்யோ... நானும் சொல்லாம, நீயும் சொல்லாம யார் மூலமாவது அவருக்குத் தெரிய வந்தா உன்னையும் என்னையும் பொரிச்சு எடுத்துடுவாரே..."



"அதெல்லாம் யார் மூலமாகவும் எதுவும் தெரிய வராது. நீ போய் வேலையைப்பாரு..."

தேன்மொழி அசாத்திய தைரியம் காட்டினாள். ஆனந்திக்கே அது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

தேன்மொழி... எப்படி நீ இப்படி மாறினே?"

"நான் மாறலை. நீங்கதான் மாத்திட்டீங்க..."

"வேண்டாம் தேனு... இப்படி எல்லாம் பேசாதே. நாளைக்கு என் தலைல கல்லையும் தூக்கிப் போட்றாதே..."

"போய் வேலையைப் பாரும்மா... கல்லு மண்ணுன்னுகிட்டு..."

தேன்மொழி பேச்சோடு கொட்டாவியும் விட்டாள். அதே சமயம் அறை வாசலில் வீல்சேரில் பாண்டுரங்கனின் அம்மாவின் வருகை ஒரு இருள் திட்டாகத் தெரிந்தது.

"உங்க பாட்டி வருது... அடக்கி வாசி."

"வரட்டுமே... இப்ப என்ன?"

"என்னங்கடி சத்தம்... அடியே தேனு — எங்கடி போய்ட்டு வர்றே..."

"ஆமாம். நீ ஒருத்திதான் பாக்கி. வந்துட்டியாக்கும்."

"நான் உன் பாட்டிடி. எடுத்தெறிஞ்சு பேசாதே."

"மண்ணாங்கட்டி."

"தெரியும்... எனக்கு இனி இந்தக் குடும்பம் உருப்படாதுங்கறது நல்லாவே தெரியும்."

பாட்டியிடம் திடீரென்று ஒரு புது ஆலாபனை.

"என்ன அத்தை சொல்றீங்க?"

"என்னத்தடி சொல்வேன். அந்த யந்திரம் இருந்தவரை எல்லாம் ஒரு கட்டுக்குள்ள இருந்தது. அது எப்ப போச்சோ இனிக் கஷ்ட காலம்தான்..."

பாட்டி அங்கு தொட்டு, இங்கு தொட்டு யந்திரம் அருகே சென்றாள். தேன்மொழிக்கே அது புதுத் தகவல்.

"எந்த யந்திரம்?" — கேட்டாள்.

"அதான் பூஜை ரூம்ல சாமி முன்னால ஒரு சதுர செப்புத் தகடு வெச்சிருந்தோமே..."

"சதுர செப்புத் தகடா?"

"நீ அடிக்கடி சாமி முன்னாடி போய் நின்று கும்பிட்டுருந்தா உன் மனசுல அது பதிஞ்சிருக்கும். உன் வரைல அந்த ரூம் பக்கமே நீ எப்பவாவதுதானே போவே..."

"அம்மா நீ புலம்பாம விஷயத்துக்கு வா. ஏதோ செப்புத் தகடு... யந்திரம்னே... அது எங்கே போச்சு?"

"அதை ஏன் கேக்கறே... தியாகராஜ சுந்தரம்னு ஒரு பெரியவர்... அது தனக்கு வேணும்னு கேட்டு வாங்கிட்டு போய்ட்டார்."

"சரி அதுக்கென்ன இப்போ?"

"என்ன தேனு அப்படி கேட்டுட்டே. அது சக்தி வாய்ந்த யந்திரம். உங்க தாத்தா காலத்துல இருந்து இருக்குது."

"யந்திரம்னா மெஷின்னு ஒரு அர்த்தம் உண்டு. நம்ம வீட்ல வாஷிங் மெஷின் இருக்கு, மிக்ஸி இருக்கு, காபி மேக்கர் இருக்கு... அந்த மாதிரியா இது?"

"அய்யோ அதெல்லாம் மெஷினுங்க. இது யந்திரம்."

"யந்திரம்னா மெஷின், மெஷின்னா யந்திரம். நீ சொல்றது ஒரு தகடு. போனா போகட்டும் விடு."



"யந்திரம்னு தானேம்மா அதை சொல்றாங்க?"

"மத்தவங்க சொன்னா நீயும் சொல்லணுமா என்ன? யந்திரம்னா அது வேலை செய்யணும். அதால நமக்கு எதாவது கிடைக்கணும். நடக்கணும். ஒண்ணுமில்லாத செப்புத் துண்டை யந்திரம்னு சொல்லி உன்னை நீயே முட்டாளாக்கிக்காதே. நல்ல நேரத்துல போய்ப் படு..."

எரிச்சலுக்குத் தாவினாள் தேன்மொழி. அதற்குமேல் ஆனந்தியாலும் அவளிடம் பேசமுடியவில்லை. ஆனால் பாட்டியிடம் மட்டும் புலம்பல்.

"இனி இந்தக் குடும்பம் தேறப் போறதில்ல... அவ்வளவுதான். கண்ண மூட்றதுக்கு முதல் நாள்கூட என் வீட்டுக்காரர் அந்த யந்திரத்தைத் தொட்டு பூஜை செய்தாரு. அந்தப் பலன்தான் இவ்வளவு நாள் காப்பாத்தி வந்துருக்குது. இனி அவ்வளவும் அம்புட்டுதான். இந்த பாழாப்போன சாவாச்சும் வருதா.. வந்தா இதை எல்லாம் பாக்காம போய்ச் சேர்ந்துடுவேன்." — பாட்டி புலம்பிக் கொண்டே வீல் சேரில் திரும்ப, ஆனந்தி முகத்தில் ஒரே வாட்டம். தேன்மொழியும் கவனித்தாள்.

"அம்மா... போம்மா. போய் வேலையைப் பார். கண்டதைப் போட்டுக் குழப்பிக்காதே," என்று அவளைப் பிடித்து வெளியே தள்ளி கதவையும் தாழிட்டுக் கொண்டாள். அப்போது தொலைபேசி அலறும் சப்தம். ஆனந்தி வேகமாகச் சென்று எடுத்தாள்.

"மேடம் நான் பி.ஏ. கைலாசம் பேசறேன் மேடம்."

"சொல்லு கைலாசம்."

"நம்ம பாடி பில்டிங் பேக்டரில திடீர்னு தீ விபத்து ஏற்பட்டுடிச்சு மேடம். நல்லவேளை பெருசா பத்தி எரியறதுக்கு முந்தி அணைச்சுட்டோம். இருந்தாலும் ஒரு

அஞ்சாறு லட்சம் லாஸ் ஆகியிருக்கும். ஆகையால சார் இன்னிக்கு வீடு திரும்ப நேரமாகும். அதான் உங்களுக்கு சொல்லிடலாம்னு–" — பி.ஏ. கைலாசம் அந்தப் பக்கமாகப் போனை வைத்தான். இந்தப் பக்கமாய் ஆனந்தியிடம் நடுக்கம். சற்றுமுன்தான் பாட்டி புலம்பிவிட்டுப் போனாள் இனி கெட்டகாலம் என்று... அவள் சொல்லி வாய்மூடு முன் ஆரம்பமாகிவிட்டதா அந்தக் கெட்ட காலம்?

## 5

மந்திரம் என்பது சப்தம் சார்ந்தது. அதுவும் சாதாரண சப்தமில்லை... அது ஒரு விசேஷமான சப்தம் சார்ந்தது என்று பார்த்தோம். மனத்துக்கு அது திறம் தருவதால் மந்திரம் எனப்படுகிறது என்றும் பார்த்தோம்.

இப்படிப்பட்ட மந்திரங்கள் மூன்று விதங்களில் அட்சராந்தகமாக, அட்சராப்யமாக, பீஜாட்சரமாக உள்ளதையும் அறிந்தோம். இதில் அட்சராந்தகம் என்பது எழுத்தில்லாத சப்த வடிவ மந்திரங்கள். அட்சராப்யம் என்பது எழுத்தில் உள்ள சுப்ரபாதம், சஷ்டி கவசம், காயத்ரி ஜெபம் போன்றவை. பீஜாட்சரங்கள் என்பவை பெரும்பாலும் மனிதன் தன் மொழியில் பயன்படுத்தாதவை... எழுதி வைத்திருப்பவை. அதையும் அவன் உலோகம் ஏதாவது ஒன்றில்தான் எழுதி வைத்திருப்பான். அதிலும் செப்பு அல்லது தங்கம், அபூர்வமாக வெள்ளியால் ஆன உலோகத் தகடுகளில் அதை எழுதி வைத்திருப்பான்.

அதிகம் செப்புத் தகடுகளே பயன்படுத்தப்படும். செப்பு தான் சரியான மின் கடத்தி. அதனாலேயே இன்று மின்சக்தி ஒளியாக, மேலும் பல விதங்களில் நமக்குக் கிடைக்கிறது. செம்பு இல்லாத நிலையில் மின்சக்தி இருந்தாலும் பெரிய அளவில் நாம் அதைப் பயன்படுத்த இயலாது.



செப்புக்கு அப்படி ஒரு குணம். இது சக்தியைக் கடத்துவதோடு தன்னிடமும் தக்க வைத்துக் கொள்ளவல்லது.

பீஜாட்சரம் எழுதப்பட்ட செப்புத் தகடுகள் விளக்கொளி படும்போது மெல்லிய சக்திக்கு ஆட்படுகின்றன. அதே சமயம் இடையறாத மந்திரம் சப்த அலைகள் அதன்மேல் படும்போது அவற்றை அப்படியே ஸ்வீகரித்துத் தம்மேல் பதியவைத்துக் கொள்கின்றன.

உரிய சரியான பீஜாட்சரம் எழுதப்பட்ட செப்புத்தகடு உரிய முறையில் பூஜிக்கப்பட்டு அதன்முன் அமர்ந்து இடையறாத மந்திர ஜபம் புரியும்போது சப்த அலைகளை ஒரு டேப்ரிக்கார்டர் நாடாவானது எப்படித் தன்னுள் வாங்கிப் பதிய வைத்துக் கொள்கிறதோ அப்படிப் பதிய வைத்துக் கொண்டுவிடுகிறது.

இதைத்தான் உருவேற்றுதல் என்கிறார்கள். உருவேற்றப்பட்ட செப்புத்தகடு உருவேற்றப்பட்ட நிலையில் பீஜாட்சர மந்திர சப்த அலைகளை ரிமோட் ஒன்றில் இருந்து வெளியேற்றப்படும் மின்காந்த அலைகளைப் போலக் கசிய விட்டபடியே இருக்கும்.

அதாவது உருவேற்றப்பட்ட ஒரு யந்திரத் தகடு உள்ள இடத்தில் உதாரணமாக அதில் ராமநாமம் சொல்லி உரு வேற்றப்பட்டிருந்தால் அது இடையறாமல் ராமா... ராமா... என்கிற சப்தக் கசிவை அது இருக்கும் இடத்தில் கசிய விட்டபடி இருக்கும்.

நம் செவிப்புலன்களுக்கு அந்தச் சப்தம் கேட்காது. ஆனால் எப்படி நுண்ணிய சப்த அலைகளால் பூச்சிகள், பல்லிகளை செயலிழக்கவைக்கும் வழிமுறைகள் இப்பொழுது கண்டறியப் பட்டுள்ளனவோ அப்படியே இந்த நுண்ணிய சப்த அலைகளால் யந்திரத் தகடு உள்ள வீட்டில் வாழ்பவர்கள் உடம்பில் நுண்ணிய செயல் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உடம்பைச் சார்ந்த மனமும் அதன் காரணமாக மாற்றங்களுக்குள்ளாகி நம் சிந்தனை – செயல்பாடுகளிலும் நமக்கே தெரியாதபடி மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இப்படி ஒரு மறைவான இயக்க சக்தியாக இது இருப்பதால்தான் இதை இயந்திரம் என்கிறோம். இதை நுட்பமாக விளங்கிக் கொள்ளாமல் வெறும் செப்புத் தகடு, உள்ளே கோணல்மாணலாக ஏதோ கோடு... எல்லாம் பித்த லாட்டம் என்பது இதைப் புரியாதவர்களின் அவசரத்தையும் ஏமாந்துவிடக் கூடாது என்கிற அவர்களின் எச்சரிக்கையையும் தான் காட்டுகிறது.

இந்த நுட்பமான யந்திரப் பதிவு உலகம் முழுவதும் உள்ளது.

மொத்தத்தில் மந்திரம் பதிவாகி செயல்படும் இடம் யந்திரம், இந்த மந்திரத்தையும் யந்திரத்தையும் பயன்படுத்து வதில்தான் தன் திறம் உள்ளது.

ஆம் அதுவே தந்திரமாகியது! எப்படி?

சோகமாக இருந்த ரமேஷைப் பார்த்த சங்கருக்குள் ஒரே குடைச்சல்.

"என்னடா மாப்ள ஒரே சோகமா இருக்கே...?"

"மாப்பிள்ளையா?"

"ஆமா... இழுத்துகிட்டு ஓடப்போறே. புடிச்சது புளியங்கொம்பு. மாப்ளதானே நீ?"

"வயித்தெரிச்சலைக் கிளப்பாதடா..."

"ஏன்டா... எதாவது பிரச்சினையா?"

"பிரச்சினையா... நினைச்சாலே மண்டகாயுது."

"என்னடா... பாண்டுரங்கன் சாருக்குத் தெரிஞ்சு போச்சா? அடியாளுங்க வந்து மிரட்டிட்டுப் போயிட்டாங்களா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லடா..."



"வேற என்னடா..."

"அத எப்படிடா சொல்வேன். நாம ஒணு நினைச்சா அது இஷ்டத்துக்கு ஒண்ணு நடக்கும்னு சொல்வாங்களே. அப்படி ஆகிப்போச்சுடா."

"கொஞ்சம் விபரமா சொல்றியா...? தேன்மொழி உன்னை சும்மா விளையாட்டுக்குக் காதலிச்சேன்னு உன் காதுல பூ வெச்சுட்டாளா?"

"அதைக் கூட நான் தாங்கிகிட்டிருப்பேன். ஆனா இது வேற." ஓடிப்போகலாம் என்று சொன்னது வரை சொன்னான். அப்படியே தன்னைக் காதலிக்க அவள் சொன்ன காரணம்தான் அவனைப் பெரிதாகக் குத்தி விட்டது.

"நான் ஒண்ணும் பெரிய பர்சனாலிட்டி இல்ல தான். ஆனா எனக்குன்னு ஒரு மனசு இருக்குதுல்ல... அது எவ்வளவு வருத்தப்படும்னு தேன்மொழி யோசிக்கலை. அப்பா அம்மா இல்லாத — அவளுக்கு ஏத்த அனாதைங் கறதாலேயே என்னைக் காதல் பண்ணியிருக்கா.

கடைக்குப் போய் தனக்குத் தேவையானதைக் காசுக்கு வாங்கற மாதிரிதான் கிட்டதட்ட என்னைத் தேர்வு செய்துருக்கா... அங்கதான் எனக்கு இடிக்குது." ரமேஷ் சுயமரியாதையின் வலியை உணர்த்தினான். சங்கர் சிரித்துவிட்டான்.

"என் வேதனை உனக்கு சிரிப்பா இருக்குதா?"

"நீ வேறடா... இதோ பாருடா. இதே விசயத்தை அவ கல்யாணம் பண்ணின பிறகு சொல்லியிருந்தா என்ன பண்ணியிருப்பே."

"தலை எழுத்தேன்னு கேட்டுக்க வேண்டியதுதான். வேற வழி."

"இப்பவும் அப்படியே நினைச்சுக்க. யோசிச்சுப் பாருடா, உன் முகரைக்கு இது எவ்வளவு பெரிசு? நகை நட்டு பணம்னு எல்லாத்தையும் எடுத்துகிட்டு வர்ரேங்கறா. யாருக்குக் கிடைக்கும் இந்த சான்ஸ்."

"ஆனா இந்த ஊரைவிட்டுப் போகணுமே..."

"போடா... வாழ்க்கை வேணும்னா போ. அவனவன் துபாய், அபுதாபின்னு போய் அங்க கக்கூசே கழுவறான். உனக்கு இதுதானா பெரிய விஷயம்."

"இல்லடா... நான் அவசரப்பட விரும்பல. அப்படி எல்லாம் கேரளா பக்கம் போயெல்லாம் நல்லா இருக்க முடியாது. கைக் காசு தீர்ந்துட்டா தேன்மொழி மனசு மாறினாலும் மாறிடுவான்னுதான் எனக்குப் படுது. அதுக்கப்புறம் அவங்கப்பா அவளை வேணா ஏத்துக்கு வாரு. ஆனா என்கதி?"

"அதுவும் சரிதான்... யோசிக்க வேண்டிய விஷயம் தான். சரி முடிவா என்ன பண்ணப்போறே?"

"பார்ப்போம்... இன்னும் ஒருநாள் டயம் இருக்குல்ல. அதுக்குள்ள எடுத்துடுவேன்..." என்ற ரமேஷை சங்கர் பார்த்த விதமே ஒரு தினுசாக இருந்தது. அதில் ஆயிரம் அர்த்தங்கள்.

**வீ**ட்டுக்குள் நுழைந்த சங்கருக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. பாண்டுரங்கனின் ராகவா பாடி பில்டிங் ஒர்க்ஸிலிருந்து அவனுக்கு க்ளார்க் வேலைக்கு இண்டர் வியூ வந்திருந்தது. எப்பொழுதோ போகிற போக்கில் எழுதிப் போட்டதற்கு இப்பொழுது இண்டர்வியூ...!

வேலை கிடைக்குமா?



**அ**ன்றைய பேப்பரில் பெரியவர் தியாகராஜ சுந்தரம் பற்றிய பெரிய அளவில் செய்தி வெளியாகியிருந்தது. ஆளும் கட்சி சார்பில் அவரை நியமன எம்.பி.யாக்க முதல்வர் விரும்புவதாகத் தகவல். தியாகராஜ சுந்தரமும் சம்மதித்து விட்டதாகத் தகவல். அப்படியே வரும் குடியரசு தினவிழாவில் அவருக்கு பத்மஸ்ரீ விருதுக்கும் பொரிசு செய்யப்பட்டிருக்கும் விஷயம் கட்டம் கட்டப்பட்டுப் போடப்பட்டிருந்தது.

பேப்பரைப் படித்த பாண்டுரங்கனுக்குள் ஒருவித இனம்புரியாத அவஸ்தை. இப்படிப்பட்ட பட்டம் பதவிக் கெல்லாம் அவர்தான் குறிவைத்திருந்தார். ஆனால் அதில் துளிகூட நாட்டமில்லாத தியாகராஜ சுந்தரத்துக்கு எம்.பி. பதவி, அப்படியே பத்மஸ்ரீ விருது என்பதெல்லாம் ஏதோ குருட்டு அதிர்ஷ்டம் போல தோன்றியது. ஆவேசமாக வெளியே வந்தவர் காரில் ஏறியவராக தியாகராஜ சுந்தரம் வீட்டுக்குப் போகச் சொன்னார்.

மனதில் இனம்புரியாத குமுறல். அதே சமயம் தியாக ராஜ சுந்தரம் தெரிந்தவராகி விட்டதால் அவரைப் பாராட்டித் தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டிய ஒரு தந்திர உணர்ச்சி. பி.ஏ. கைலாசமும் உடன் தொற்றிக் கொண்டிருந்தான்.

"சார்... அந்த யந்திரம் அவர் சொன்ன மாதிரியே அவருக்கு எல்லாம் கொடுக்கத் தயாராயிடிச்சு போல இருக்கு," என்று அவர் தூக்கிக் கொடுத்த யந்திரத்தை ஞாபகப்படுத்தினான்.

"வாயைக் கழுவுய்யா... அது என் வீட்ல இருந்தவரை எனக்கு என்னத்த கிழிச்சிச்சு... யந்திரமாம் யந்திரம்." சீறினார். கைலாசம் சொன்னதைக் கணக்கிலேகூட எடுத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. வெளியே

பார்த்துக் கொண்டே வந்தார். முகம் சிவந்து விட்டிருந்தது. ஏற்கெனவே தொழிலகத்தில் தீப்பிடித்ததால் உருவான தாக்கம். இது அடுத்த அடி.

தியாகராஜ சுந்தரம் வீடும் வந்தது.

எளிய ஓட்டுக்கூரை வீடு. முன்பக்கம் பிரம்பு வேலி. அதன் மேல் வேலிமாணிக்கம் என்னும் பூங்கொடி. வேலிக்கு அப்பால் ஒரு டென்னிஸ் விளையாடுமளவு மைதானம். அப்பால் ஒரு ஆஞ்சனேயரின் யோக நிஷ்டையில் உள்ள சிலை. சிலர் அங்கங்கே அமர்ந்து தியானம் பண்ணிக் கொண்டிருந்தனர். உள்ளே நுழைந்த பாண்டுரங்கனை ஆச்சரியத்தோடு வரவேற்றார் தியாக ராஜ சுந்தரம்.

"வா... பாண்டுரங்கா..."

"அதான் வந்துகிட்டே இருக்கேனே... அப்புறம் எம்பி ஆகப் போறீங்க போல இருக்குதே..."

"அட... அதுக்குள்ள உனக்குத் தெரிஞ்சிடிச்சா?"

"ஊருக்கே தெரியும். பத்திரிகைலயே வந்துடுச்சே."

"பத்திரிகைக்காரங்களுக்கு ஆனாலும் அவசரம்..." என்று சலித்துக் கொண்டார் தியாகராஜ சுந்தரம். உள்ளே நேரே பார்க்கும் விதமாய் பூஜை மேடையில் யந்திரம் பூக்கள் அர்ச்சிக்கப்பட்ட நிலையில் கிடந்தது. பாண்டு ரங்கனும் பார்த்தார்.

"என்ன பாக்கறே?"

"என்ன அந்த செப்புத்தகட்டுக்கு அதுக்குள்ற பூஜை யெல்லாம் போட்டாச்சு போல இருக்குதே..."

"அதுக்குத்தானே வாங்கிகிட்டு வந்தேன்."

"இது வந்த நேரம் எம்.பியா வேற ஆகப்போறீங்க ஆகையால் இதை இனி விடமாட்டீங்கன்னு சொல்லுங்க



"இது என்னப்பா- என் குருநாதர் கொடுத்த யந்திரத்து கிட்ட நான் இந்த உலகத்தைக் கேட்டா கூட 'இந்தா பிடி'ன்னு தூக்கிக் கொடுத்துடும். இது ரொம்ப சக்தி."

"அப்ப யந்திரம்தான் எல்லாத்துக்கும் காரணமா?"

"யந்திர சக்தியும் ஒரு காரணம். நான் என் சக்தி யோட இதை சேர்த்துகிட்டேன். பலம் அதிகமாயிடிச்சு." — தியாகராஜ சுந்தரம் அழகாக—தெளிவாகப் பேசினார்.

"அய்யா... பெரிய பொறுப்புக்கெல்லாம் போகப் போறீங்க. இப்படி முட்டாள்தனமா பேசுனா எப்படி?"

"வேண்டாம் பாண்டுரங்கன்... இதுக்கு மேல எதுவும் பேசாதே. என் செயலை முட்டாள்தனம்னு சொல்ற உன் கிட்ட எவ்வளவு முட்டாள்தனம் இருக்கு தெரியுமா?"

"அது நிச்சயம் இருக்கும். தெரிஞ்சு நிச்சயமா இருக்காது. தெரியாம வேணும்னா இருக்கலாம்."

"தெரிஞ்சே இருக்குது... இந்த யந்திரம் என் குருநாதர் நான் என் குடும்ப வாழ்க்கைல நல்ல விதமா வரணும் கறதுக்காக ஆசையா செய்து கொடுத்தது. ஆனா உன் அப்பன் இதைத் தனக்கு வேணும்னு கேட்டான். ஏன்னா நான் குடும்பம் குட்டின்னு இல்லாத ஒரு யோகி. அதனால என் நண்பனுக்கு விட்டுக் கொடுத்தேன். ஆனா அவன் காலத்துக்குப் பிறகு இதை நீ உரிய முறைல வணங்கி வழிபடலை. என் குருநாதரும் கனவுல வந்து 'அந்த யந்திரம் பூஜை இல்லாம இருக்கு. அதை நீ வாங்கி வந்து பூஜை செய். நிறைய நல்ல காரியங்கள் செய்யற சக்தி உனக்குக் கிடைக்கும்'னு சொன்னதாலதான் உன்கிட்ட வந்து அதைக் கேட்டேன்.

சும்மா கேட்க எனக்கு இஷ்டமில்லை. அதனாலதான் என் இடத்தை விட்டுக் கொடுத்தேன்."

"அப்ப இதுக்கு சக்தி இருக்குன்னு சொல்றீங்களா?"

"நான் உன்கிட்ட இந்த யந்திரம் சம்பந்தமா பேசவே விரும்பல. உன் வரைல இது செப்புத் தகடு. செப்புத் தகடு தகடாகவே இருந்துட்டுப் போகட்டும். இப்ப என்ன?"

"இப்படி சொன்னா எப்படி? நான்கூட இப்ப உங்களை முதல்ல வாழ்த்தற ஆளா நான்தான் இருக்கணும்னு வாழ்த்தத்தான் வந்தேன். ஆனா நீங்க இங்க பேசறதை எல்லாம் பார்த்தா இனியும் சும்மா இருக்கக் கூடாதுன்னு தோணுது."

"என்ன... திருப்பிக் கேட்கப் போறியா?"

"சேச்சே- கொடுத்ததை திருப்பிக் கேட்கற பரம்பரைல நான் வரலை. அதே சமயம் இப்படி தகட்டை வெச்சுகிட்டு இது வேலை செய்யுது, இது சக்திமிக்கதுங்கற புளுகை எல்லாம் ஒத்துக்க முடியாது."

"சரி... இது ஒரு வேலையும் செய்யலை. போதுமா? ஆளைவிடு. நீ புறப்படு."—தியாகராஜ சுந்தரம் தீர்மானமாகப் பேசியது பாண்டுரங்கனைக் கேலி செய்வதுபோல கூட இருந்தது. ஆனால் பதிலுக்கு பதில் பேச மறுப்பவரிடம் எதைப் பேசுவது?

"நான் என்ன சொல்ல வர்றேன்னா... இது எப்படின்னு நான் விளங்கிக்க விரும்பறேன். விளங்க வையுங்க."

"இதோ பார்... அனுபவத்தால மட்டுமேதான் இதை விளங்க முடியும். அஞ்சும் மூணும் எட்டுங்கற மாதிரி ஒரு கணக்கு கிடையாது இது. மந்திரமும் யந்திரமும் தந்திரத்தாலதான் முழு பலனைத் தரும். தந்திரம்கறது தன்னோட திறம். அதாவது தான் இதை எவ்வளவு தூரம் நம்பி பயன்படுத்தறேங்கறதுல மட்டும்தான் இருக்கு."

"என் கிட்டையும்தான் தந்திரம் இருக்கு. ஒரு தொழிலதிபர்கிட்ட இல்லாத தந்திரமா?"



"ஏன் அரசியல்வாதியை விட்டுட்டே... இன்னிக்கு யார்கிட்ட தந்திரம் இல்லை. தந்திரம்கறது இன்னிக்கு சாமர்த்தியமான ஒரு விஷயமால்ல பார்க்கப்படுது."

"அப்ப எங்க தந்திரங்களை விட இந்த மந்திர யந்திர தந்திரம் பெருசா...?"

"நான் அப்படி எல்லாம் சொல்லலையே...?"

"அப்படித்தானே அர்த்தம் வருது?"

"அது யோசிக்கற ஆளைப் பொறுத்தது...!"

"என்னய்யா குழப்பறீங்க...?"

"நான் குழப்பலை... ஆனா நீ ஆர்வக் கோளாறால உன்னை நல்லாவே போட்டு குழப்பிக்கறே..."

"எதுக்கு வளவளன்னுகிட்டு... உங்ககிட்டையும் ஏதோ தந்திரமிருக்கறதா சொல்லிட்டீங்க. என்கிட்டையும் தந்திரமிருக்கு. உங்களுக்கான எம்.பி. பதவியை என் தந்திரத்தால நான் வாங்கிக் காட்றேன். உங்க தந்திரத்தால — உங்களால அதைத் தடுக்க முடியுமா?" பாண்டுரங்கன் எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்துவிட்டார்.

"இதோ பார் பாண்டுரங்கன். நான் தந்திரம்னு சொன்னது எந்த ஏமாற்று விஷயத்தையும் இல்ல... இந்த மந்திரமும் யந்திரமும் எனக்குக் கொடுக்கற சக்தியைத்தான் நான் தந்திரம்னேன். இந்த சக்தியைக் கொண்டு நான் செய்யற செயல்களைப் பார்த்துட்டுதான் இந்தப் பதவி பட்டமெல்லாம் என்னைத் தேடி வந்துருக்குன்னு நினைக்கறேன். புதுசா ஒரு யோகப் பயிற்சி செய்து தீராத பல வியாதிகளைத் தீர்க்க வழி கண்டவன் நான். இந்த விஷயம் பிரதமர் வரை போய் அவர்தான் எனக்கு பத்மஸ்ரீ விருது கொடுத்தா என்னன்னு சிந்திச்சிருக்கணும். அப்படியே எம்.பியாக்கினா அந்தப் பதவி பலத்தால நான்

யோகப் பயிற்சியைப் பரப்புவேன்னு உலகம் பூரா நினைச்சிருக்கலாம். எதையும் நான் கேட்கலை. முதல்வர் இதெல்லாம் கிடைச்சதுல எனக்கு வருத்தமும் இல்லை. மகிழ்ச்சியும் இல்லை. ஒரு கர்ம யோகிக்குக் கடமைதான் பெருசு. அதை நீ புரிஞ்சுக்கணும்."

"ஆ- இதெல்லாம் நீங்க என்னை சமாதானப்படுத்த பேசற பேச்சு. நான் இப்ப சவால் விட்றேன். இதோ இந்த யந்திரத்துக்கு சக்தி இருந்தா உங்களுக்கு எதிரா நான் காய் நகர்த்தப் போறேன். தடுத்து நிறுத்தட்டும் பார்க்கலாம். அப்ப நான் இந்த யந்திரத்துக்கு ஒரு அர்த்தம் இருக்கு — சக்தி இருக்குங்கறதை ஒத்துக்கறேன்..."

"எதுக்கு இந்த விஷப்பரீட்சை... நான் இதை எல்லாம் விரும்பலை. விட்டுடு. போய் உன் தொழிலைக் கவனி."

"இந்தப் பேச்செல்லாம் வேண்டாம். நல்ல ஆம்பிளையா இருந்தா என்னை சமாளிங்க. என்னிடம் இருக்கற பணம் கிழ பாதாளம்னா மேலே கைலாசம் வைகுண்டம் வரை பாயும். அதாவது கைலாசமும் வைகுண்டமும் இருந்தா... ஆனா உங்க யோக சக்திங்கறது வேணும்னா சளி காய்ச்சல் வராம தடுக்கலாம். அவ்வளவுதான்..." — என்று சற்று ஆவேசமான பாண்டுரங்கன் அங்கிருந்து புறப்பட்டார்.

தியாகராஜ சுந்தரத்துக்கு ஒரு வம்பு தேடி வந்து சவால் விட்டு விட்டுப் போவதாகத் தோன்றியது.

இண்டர்வியூவிற்கு ஏகப்பட்ட பேர் வந்திருந்தனர். மொத்தம் இரண்டே இரண்டு சீட். இருபது பேர் வந்திருந்தனர். அவர்களில் சங்கரும் ஒருவன். வந்திருப்பவர்களில் சிலரைச் சங்கருக்கு முன்பே தெரியும். அவனை விட எல்லாவிதத்திலும் அவர்கள் அதிக மதிப்பெண்ணும்



தகுதியும் உடையவர்கள். எனவே தனக்கு வேலை நிச்சயம் கிடைக்கப் போவதில்லை என்று முடிவெடுத்து விட்டான்.

நடுவில் பாண்டுரங்கன் திபுதிபுவென்று ஆபீஸ் பரிவாரங்களோடு கடந்து போனார். அவரைப் பார்க்கவும் தேன்மொழியின் எண்ணமும், ரமேஷின் குழப்பமும்தான் ஞாபகத்திற்கு வந்தது.

ரமேஷ் விலகுவானா— இல்லை அவளோடு சேர்ந்து ஓடுவானா என்பதையும் முடிவு செய்ய முடியவில்லை.

இதற்கிடையே ரைட்டிங் டெஸ்ட்டுக்காக ஆளுக்கொரு அச்சடிக்கப்பட்ட தாளை நீட்டினர். அதில் கட்டங்களில் டிக் செய்து விடை தர வேண்டும். அதைப் பார்த்தவனுக்கு தலையைச் சுற்றியது. பல கேள்விகளுக்கு விடை தெரியவில்லை. இருந்தும் புத்தியில் ஒரு குறுக்கு ஓட்டம்!

'எம்.டி. திரு பாண்டுரங்கன் சார் மகளைத் துரத்தித் துரத்திக் காதலிக்கும் ஒருவனை எனக்குத் தெரியும்' என்று எழுதி அதை கலெக்ட் செய்ய வந்தவரிடமும் கொடுத்தான். அப்படியே என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று கொஞ்சம் மனம் நடுங்கியபடியே நின்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே பி.ஏ. கைலாசம் தனியே வந்து "இங்க சங்கர் யாரு?" — என்று கேட்டு அழைத்துச் சென்றான்.

எதிரில் பாண்டுரங்கன் மட்டும்...

"குட்மார்னிங் சார்..."

"நீதான் சங்கரா?"

"ஆமாம் சார்..."

"கேள்விக்கு பதில் எழுதச் சொன்னா என் பொண்ணைப் பத்தி எழுதியிருக்கியே. என்னை சந்திக்கறதுக்காகப் பண்ண தந்திரமா இது?"

"சத்தியமா இல்ல சார்..."

"அப்ப என் பொண்ணை ஒருத்தன் காதலிக்கறான் கறது ஒரு உண்மை. அப்படித்தானே?"

"நிச்சயமா சார். ஆனா உங்க பொண்ணு அவனைக் காதலிக்கலை சார்."

"அந்தப் பையன் யார்? உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"என் குளோஸ் ஃப்ரெண்ட் சார் அவன். எனக்குத் தெரியாதுங்களா..."

"சரி அவன் காதலிச்சா காதலிச்சிட்டுப் போறான். என் பொண்ணு காதலிச்சால்ல நான் கவலப்படணும்."

"உங்க பொண்ணு கூடிய சீக்கிரம் காதலிக்கலாம். இப்ப அது அவங்க அளவுல ஒரு நட்புங்கற மாதிரி இருக்குது. என் நண்பனோ எப்படியும் உங்களுக்கு மருமகனாயிடணும்னு சபதமே எடுத்துட்டான். இதை ஏன் நான் சொல்றேன்னா அவன் ஒரு அன்றாடங்காய்ச்சி. இந்த நிறுவனமோ பல பேருக்கு வேலை கொடுக்கற ஒரு பெரிய நிறுவனம். நீங்களும் சொஸைட்டில பெரிய விஐபி. உங்க பேர் கெட்டுடக் கூடாது பாருங்க. அதனாலதான்..."

"நீ பொய் சொல்லலையே...?"

"சார்- நான் உங்க கம்பெனில பெரிய பொசிஷனுக்கு வர விரும்பறேன். பொய் சொல்லி அதைக் கெடுத்துக்க வேணா..."

"நீ சொல்றது உண்மையா இருந்தா உனக்கு வேலைக்கான ஆர்டர் தேடி வரும். இல்லைன்னா என் ஆட்கள் தேடி வருவாங்க. ஞாபகம் வெச்சுக்கோ..."

"நான் ஆர்டருக்குக் காத்திருக்கேன் சார். அப்படியே நீங்க சொன்னா உங்களுக்காக உயிரையும் கொடுப்பேன்



வரேன் சார்..." கிடைத்த சந்தர்ப்பத்தைச் சக்கையாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டவனாக வெளியில் வந்தான் சங்கர்.

முகத்திலும் வெற்றிப் புன்னகை!

## 6

மந்திரத்தையும் அதைத் தன்னகத்தே கொண்ட யந்திரத்தையும் பயன்படுத்தும் ஒரு திறம் ஒருவருக்கு எப்பொழுது ஏற்படும்? எப்படி ஏற்படும்?

மந்திரம் என்றால் என்ன... யந்திரம் என்றால் என்ன? என்று விளங்கிக் கொள்ளாதவர்களால் தன் திறத்தோடு செயல்படுதல் சாத்தியமேயில்லை. மிக நன்றாகக் கூர்ந்து கவனித்தால் மந்திரம் – யந்திரம் இரண்டிலும் ஒரு தொடர்பு இருப்பது புலனாகும். ஒன்று சொல், இன்னொன்று செயல். சொல்லும் செயலும் சேர்ந்தால்தான் விளைவு. இந்த விளைவு யாருக்குச் சொந்தம்?

சொல்லையும் செயலையும் அறிந்தவர்களுக்கே இது சாத்தியம். காட்டில் அரக்கர்கள் தொல்லை. அவர்களை அழிக்க விசுவாமித்திரரால் முடியும். ஆனால் அதற்குப் பல தடைகள். அவரது தவசொரூபம் அதனால் பாழ்படலாம். இந்த நிலையில் அவர் ராம–லட்சுமணர்களைத் தேர்வு செய்கிறார். இருவர் காதிலும் 'பலா–அதிபலா' மந்திரங்களை ஓதி அவர்களுக்குள் மந்திரங்களைப் பதிய வைக்கிறார். அந்த மந்திர சப்தங்களின் அதிர்வு அவர்களுக்குள் வீரமாகக் கொப்புளிக்கிறது. பிறக்கும்போதே ஜாதக ரீதியாக இருவர் கொண்ட சிறப்பும் சேர்ந்துகொள்ள ராம–லட்சுமணர்கள் அசுரர்களை அழிக்கின்றனர். விஸ்வாமித்திரரும் வெற்றிப் புன்னகை பூக்கிறார். விஸ்வாமித்திரர் வரையில் பலா–அதிபலா மந்திரம், ராமனாகிய யந்திரத்தில் பதிவாகிட அதைச் செயல்படுத்திக் காட்டியதுதான் அவரது தந்திரம்.

புராணக் கதைகளில், இதிகாசக் கதைகளில் நிறைய உதாரணங்கள் காணக் கிடைத்தாலும் அவை இன்றுள்ள நிலையில் நம் பார்வைக்கு நம்ப முடியாத Fantasy ஆகத்தான் காட்சி தருகின்றன. இன்று பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் பலரும் மந்திரம், பின் அது பதிவான யந்திரம் இதன் செயல்பாட்டை நிரூபிக்க முடியுமா என்று கேட்கின்றனர். இதற்குப் பதிலாக சித்தர்களின் ஜீவசமாதி உள்ள இடங்கள் மற்றும் மிகச் சரியான முறையில் யந்திர பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்கள் மக்களை ஈர்த்து அங்கே செல்வம் குவிவதை சிலர் சான்றாகக் கூறினாலும் அதை ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர். இவர்கள் கருத்துக்கு உதவியாக யந்திர, மந்திர தத்துவத்தை சரியாக விளங்கிக் கொள்ளாமல் ஒரு குடிசைத் தொழில்போல யந்திரங்களைத் தயாரித்து அதை பிளாட்பாரக் கடைகளில் கூடப் பலரும் விலைக்கு விற்கும் போது அதைப் பார்க்கும் நமக்கு வருத்தமே ஏற்படுகிறது.

இன்று ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளால் யந்திரங்களில் கோலத்தையும் எழுத்தையும் ஒரு டை தயாரித்து அச்சு அசலாக ஒன்றேபோல லட்சக்கணக்கான யந்திரத் தகடுகளை நொடிப் பொழுதில் உருவாக்கிட முடியும். ஆனால் யந்திரம் தயாரிப்பது என்பதும் காலநேரம் சார்ந்த ஒரு செயல். அதை எழுதுபவர் உபவாசம் இருந்து மந்திர சித்தி பெற்றவராக இருக்க வேண்டும். ஒரு சிறு பிழைகூட இன்றி அதை அவர் எழுதி முடிக்க வேண்டும். அதை எழுதும்போது நட்சத்திரம், ஹோரை, திதி முதலியவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. இப்படிச் சரியான கால, நேரம் அறிந்து சரியான முறையில் தயாரிக்கப்பட்ட யந்திரங்கள் வணங்கும்போது வணங்கப்படும் இடத்தில் வணங்குகின்றவருக்கு எல்லா நலன்களையும் அளிக்கின்றன. இதை விஞ்ஞான நாட்டம் உள்ள பலரும் உணர்ந்துள்ளனர்.

வெகுவிரைவில் விஞ்ஞான வளர்ச்சி யந்திர மந்திர தத்துவங்களையும் விளங்கிக் கொண்டு இவற்றைச் சார்ந்த



ஒரு புதிய சக்தியைக் கண்டறியும். எந்த ஒன்றும் விளங்கினால் விஞ்ஞானம். விளங்காவிட்டால் மெய்ஞ்ஞானம்!

கல்லூரிக்குப் புறப்பட்டு விட்ட தேன்மொழியை அவளுக்கே தெரியாமல் ஒரு நான்கு பேர் பின் தொடரத் தொடங்கினர். அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. ஒரு இடத்தில் அவளை ரமேஷ் சந்தித்தான்.

“தேன்மொழி! எனக்கு இன்னும் ரெண்டு நாள் டயம் தா... இங்கு நான் முடிக்க வேண்டிய வேலை நிறைய இருக்கு...” என்றான். அவள் முறைத்தாள். மேற்கொண்டு எதுவும் பேசாமல் தொடர்ந்து நடந்தாள். அவளுக்கு எதிர்த்திசையில் ரமேஷ் செல்லவும், அந்த நான்கு பேரும் அவனைச் சுற்றி வளைத்தனர். அவர்களைப் பார்த்த நொடியே ரமேஷுக்கு விளங்கி விட்டது. அதிர்ந்து போனான்.

“என்னடா... உனக்கெல்லாம் கோடீஸ்வரன் மகள் கேக்குதோ?”

“அய்யோ... அதெல்லாம் எதுவும் இல்லீங்க. நேத்து நான் காலேஜுக்குப் போகலை. என்ன பாடம் நடத்துனாங்கன்னு கேட்டேன்...”

“உம்... அப்புறம்?”

“சத்தியமா அதாங்க கேட்டேன்.”

“இப்ப இங்க நாங்க உனக்குப் பாடம் நடத்தப் போறோம். இந்தப் பாடத்தை நீ சாகற வரைக்கும் மறக்க மாட்டே பாரு...’ — அவர்கள் தங்கள் தர்ம பூஜையை ஆரம்பித்தனர். சரியாக இரண்டு நிமிடம்தான். ரமேஷ் நார்நாராகக் கிழிக்கப்பட்டு விட்டான்.

“எலேய்... இந்த நிமிஷத்துல இருந்து உம்மேல எங்க பார்வை இருக்கும். அந்தப் பொண்ணு பக்கம் போனே...

இப்ப உடம்பு புண்ணுதான் ஆச்சு. அப்புறமா, அது மண்ணாயிடும். ஞாபகம் வெச்சுக்கோ...” என்றபடியே கையை உதறிக் கொண்டு கிளம்பினர்.

ரமேஷ் அந்த நொடியே தேன்மொழிக்கு மனதுக்குள் முழுக்குப் போட்டு விட்டான். அவன் காதலுக்கு அவ்வளவுதான் சக்தி.

ரமேஷ் பற்றின விஷயம் பாண்டுரங்கனிடம் சொல்லப்பட்டபோது அவர் முகம் போன போக்கே சரியில்லை. உடனடியாக இண்டர்காம் வழியாக மனைவி ஆனந்தியைக் கூப்பிட்டார்.

“ஆனந்திதான் பேசறேன்... சொல்லுங்க...”

“நம்ப தேன்மொழிக்கு இந்த மாசம் கல்யாணம் ஆயிடும்னு யாரோ ஜோசியக்காரன் சொன்னான்னு சொன்னேல்ல...?”

“ஆ... ஆமாங்க...”

“அந்த ஜோசியக்காரன் எங்க இருக்கான்?”

“எதுக்குங்க கேக்கறீங்க...?”

“உம்... உன் மகள் எந்தத் தேதில ஓடிப்போவான்னு தெரிஞ்சுக்கத்தான்...”

“ஐயோ... நீங்கதான் ஜோசியத்தை நம்பாதவர் ஆச்சே...”

“ஆனந்தி... நான் நம்பறேன், நம்பலை. அது வேற விஷயம். என் காதுக்கு சில விஷயங்கள் வந்துச்சு. தேன்மொழி சரியில்லை. அவளையும் தட்டி வைக்கணும்...”

“என்னங்க, என்னென்னமோ சொல்றீங்க?”

“இதோ பார்... நான் தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கத் தயாரில்லை. அந்த ஜோசியக்காரன் சொன்ன



படியே தேன்மொழிக்கு இந்த மாசமே கல்யாணம். அது மட்டும் நிச்சயமாக நடக்கும். நீ அந்த ஜோசியக் காரனை என்னை வந்து பார்க்கச் சொல்லு...” — பாண்டு ரங்கன் இண்டர்காமை முடக்கினார். நிமிர்ந்தார். எதிரில் அவரது கட்சியைச் சேர்ந்த மாவட்டப் பிரமுகர்.

“வணக்கண்ணே...”

“வாய்யா... உக்காரு.”

“ரொம்ப டென்ஷன்ல இருக்கீங்கன்னு கேள்விப் பட்டேன்...”

“நீ உட்காரு முதல்ல. பிறகு என் டென்ஷன் பத்திப் பேசலாம்...”

உட்கார்ந்தபடியே “அண்ணே... இந்த நியமன எம்.பி. விருப்பம் எல்லாம் முழுக்க முழுக்க மேலிட விருப்பம். இந்த தியாகராஜ சுந்தரத்துக்கிட்ட என்ன இருக்குன்னு அவரை எம்.பி.யாக்க விரும்பறாங்கன்னு தெரியலை. இதுல நான் எப்படி தலையிடறது?” கொஞ்சம் ஒன்றும் தெரியாதவர் போலப் பேசினார் பிரமுகர்.

“தலையிடணும். நான்லாம் உங்க கண்ணுக்குத் தெரியலையாக்கும்?”

“உங்களுக்கு இப்படி ஒரு ஆசை இருக்கிறதே இப்பதானேண்ணே தெரியும்...”

“எனக்கு நேத்து வரை ஆசையெல்லாம் பெருசா இல்லை. ஆனா அந்த ஆள் பேரைக் கேள்விப்பட்ட உடனே எனக்குப் பத்திக்கிச்சு...”

“சரிண்ணே... நீங்க விரும்பற விஷயத்தை நான் மேலிடம் வரைக்கும் கொண்டு போறேன். போதுமா...?”

“எனக்குக் காரியம் முடியணும். கட்சிக்கு எவ்வளவு நிதின்னாலும் தரத் தயாரா இருக்கேன். போன

மாநாட்டுக்கு என் சார்பா நூறு பஸ் ஓடுனதை மேலிடத்துல ஞாபகப்படுத்து...”

“நான் பாத்துக்கறேன். நீங்க விருப்பப்படும்போது நிச்சயம் மேலிடத்துல வேற யாருக்கும் தரமாட்டாங்க. கவலையை விடுங்க. நீங்கதான் அடுத்த ராஜ்யசபா எம்பி.”

“இதை இப்பவே பத்திரிகைக்காரங்க காதுலையும் போட்டு வை. இனி அந்த தாடிக்காரன் பேர் அடிபடக் கூடாது.”

“அண்ணே... அந்த பத்மஸ்ரீ விஷயம் எதுவும் செய்ய முடியாதுண்ணே. அது சென்ட்ரல் விஷயம். அவர் பேர்ல ஏதாவது போலீஸ் கேஸ் இருந்துச்சுன்னா விசாரணைல தெரியவந்து அப்ப வேணா அதைத் தடுக்கலாம்.”

“அவ்வளவுதானே... அந்த ஆள்கிட்ட யோகாசனம் கத்துக்கற ஒருத்தனைப் போட்டுத் தள்ளிட்டு, விஷயம் தெரியாம சொல்லிக் கொடுத்து உயிர் போயிடிச்சுன்னு கேஸ் பதிவு பண்ணா..?”—பாண்டுரங்கன் அப்படிக் கேட்கவும், மாவட்டப் பிரமுகர் முகம் குபீர் என இருண்டது.

“என்னய்யா...?”

“இல்ல.. பெரியவர் மேல உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்?”

“விஷயம் பெரியவர் மேல இல்லய்யா. ஒரு தகடு தான் எல்லாத்துக்கும் காரணம்.”

“தகடா...?”

“அதான்யா.. யந்திரம், மந்திரம்னு தான் இன்னிக்கு நாடு சீரழியுதே.”

“என்னென்னவோ சொல்றீங்களேண்ணே...”



“உனக்குப் புரியாது. புரியவும் வேண்டாம். நான் சொன்னதை மட்டும் நீ கேள். நான் ஒரு சவால் விட்டுட்டேன். அதுல நான் ஜெயிச்சே தீரணும்.” பாண்டு ரங்கன் பேச்சை மாவட்டப் பிரமுகரால் எடுத்துக் கொள்ளவும் முடியவில்லை, தள்ளவும் முடியவில்லை. வரும்போது இருந்த உற்சாகம் போகும்போது இல்லை.

வாசலில் காரில் ஏறும்போது பி.ஏ. கைலாசத்தை அருகில் அழைத்தார்.

“என்னய்யா வந்துச்சு அண்ணனுக்கு.. ஏன் இப்படிப் பேசறாரு?”

“எனக்கும் ஒண்ணும் புரியலீங்க.”

“பெரியவர் தங்கமான மனுஷன்யா. இந்த ஊர்ல ஒரே நேரத்துல பத்துக் கொலை பண்றவன்கூட அவரைப் பார்த்தா ஒதுங்கித்தான்யா போவான். அவர் மேல இவருக்கு என்ன கோபம்?”

“இதை எல்லாம் என்கிட்ட கேட்டா நான் என்னத்தங்க சொல்வேன்?”

“கூடவே இருக்கே... இதுதான் விஷயம்னு கோடு காட்டுனா நான் புரிஞ்சிகிட்டுப் போறேன்...”

“ஒரு யந்திரம் தாங்க எல்லாத்துக்கும் காரணம்...”

“யந்திரமா... என்ன மெஷின்யா அது?”

“ஐயோ, இது சாமி கும்புடுவோமே.. அந்த யந்திரம்..”

“எது... இந்த தாயத்து, தகடு சமாச்சாரமா?”

“அதேதான்...”

“விவரமாச் சொல்லுய்யா...”

“அதை இங்க சொல்ல முடியாது. நான் அப்புறமா ஃபோன்ல உங்களோட பேசறேன்” — பி.ஏ. கத்தரித்து

விட்டுத் திரும்பினான். மாவட்டப் பிரமுகரும் குழப்பம் கலையாதபடியே காரைக் கிளப்பினார்.

அவ்வளவையும் மாடியிலிருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி. அவள் முகத்திலும் கவலை கொடிகட்டிப் பறந்தது. கல்லூரிக்குப் போய்விட்டு வந்த தேன்மொழியும் கவனித்தாள்.

"என்னம்மா... ஏன் பேயடிச்சா மாதிரி இருக்கே?"

"நிஜமா பேயடிச்சா கூட பரவால்ல... உங்கப்பாவோட போக்கும் செயலும் பேய் பிசாசை விடல்ல மோசமா இருக்கு..."

"புலம்பாம விஷயத்தைச் சொல்லு..."

"நான் சொல்றதுக்கு முந்தி என்கிட்ட நீ சில விஷயங்களைச் சொல்லித்தான் தீரணும். இனியும் மறைச்சேன்னா உனக்குத்தான்டி ஆபத்து..."

"என்னன்னு சொல்லு."

"நீ யாரையாவது காதலிக்கிறியா?"

"....."

"சொல்லுடி, இப்படி சும்மா நின்னா என்ன அர்த்தம்?"

"ஆமாம்... இப்ப அதுக்கு என்ன?"

"அடிப்போடி கூறு கெட்டவளே... உங்கப்பா பத்தி நல்லாத் தெரிஞ்சிருந்தும் எப்படிடி நீயெல்லாம் காதலிக்கறே?"

"இதோ பார்... நான் காதலிக்கவே அப்பாதான் காரணம். அதைவிடப் பெரிய காரணம் அந்த பீடிப்புலி செந்தில். அதை நீ தெரிஞ்சுக்கோ..."



"நான் தெரிஞ்சுக்கறது இருக்கட்டும். அவரை மீறிக்கிட்டு உன்னால வாழ்ந்துட முடியும்னு நீ நம்பறியா?"

"அதுக்காக அவர் விருப்பப்படி அந்த செந்திலுக்கு வாழ்க்கைப்பட்டு என் வாழ்க்கையை நாசமாக்கிக்கச் சொல்றியா?"

"இங்க பாருடி... பேய்க்கு வாழ்க்கைப்பட்டா புளிய மரத்துல ஏறித்தான்டி தீரணும்..."

"இதோ பாரும்மா... பழமொழிகளை எங்க எதுக்குப் பயன்படுத்தணுமோ அதுக்குத்தான் பயன்படுத்தணும். பழமொழிங்கறது வழிகாட்ற விளக்கு மாதிரி. பயமுறுத்தற பூச்சாண்டி கிடையாது..."

"பேச்சுக்குப் பேச்சுன்னு பேசறதுல பிரயோஜனமில்ல. நீ காதலிக்கிற பையனை உன் அப்பா இன்னிக்கு அடியாளுங்கள விட்டுப் பிரிச்சு மேஞ்சுட்டாரு..."

ஆனந்தியின் அந்த பதிலால் தேன்மொழிக்கு உச்சந்தலையில் தேள்கொட்டினது போல் இருந்தது.

"அவன் யாருங்கறது ஒரு ரகசியமாச்சே. எப்படிம்மா அப்பாவுக்குத் தெரியும்?"

"உங்கப்பாவுக்குத் தெரியாத ரகசியமாடி? அவருக்கு இருக்கற செல்வாக்குக்கு பூமிக்கு அடியில புதைச்சு வைச்சாலும் கண்டுபிடிச்சுருவாருடி..."

"அப்படியா...? சரிம்மா... இனியும் நான் வாயை மூடிக்கிட்டிருந்தா அது பெரிய ஆபத்துலதான் முடியும்..."

"என்னடி பண்ணப் போறே?"

"பொறுத்திருந்து பாரு..." — ஒரு பெருமூச்சோடும் வைராக்கியக் கலப்போடும் பேசிவிட்டு தேன்மொழி அகலவும், பாட்டி சக்கர நாற்காலியோடு திரும்பவும் வந்தாள்.

"அம்மாடி... நான் ஒண்ணு சொன்னா கேப்பியா?" என்று ஆரம்பித்தாள்.

"தெரியும் அத்தை. எப்படியாவது அந்த யந்திரத்தைத் திரும்பி வாங்கிட்டு வான்னு சொல்லப் போறீங்க. அதானே?"

"ஆமாண்டி. அது இருந்தவரை இப்படி எல்லாம் ஏதாவது நடந்துச்சா?"

"எல்லாமே எப்பவும் இருக்கு அத்தை. அதுக்கு யந்திரம் என்ன பண்ணும்?"

"என்னடி சொல்றே... உனக்கும் நம்பிக்கை அத்துப் போச்சா...?"

"நம்பிக்கைங்கறதே அது தன்னை நிரூபிச்சு நம்ம மனசுல நுழையறதுதானே..."

"அப்படின்னா...?"

"நானும் வேடிக்கைதான் பாக்கப்போறேன். என்னாலையும் அதுதான் முடியும். எதுக்கு சக்தி இருக்குதுங்கறதைப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே..."

கண்ணீர் திரண்டுவர மாமியாருக்கு ஒரு பதிலைச் சொல்லிவிட்டு ஆனந்தியும் மௌனமானாள்.

பாவம் அந்தக் கிழவி... சாமி அறைக்குள் தன் சக்கர நாற்காலியைத் தள்ளிக் கொண்டு போய் அம்பாள் விக்ரகம் முன் அழ ஆரம்பித்துவிட்டாள்!

மரு ஆட்டோவில் வந்து இறங்கிய அந்த ஜோதிடரை மேலும் கீழுமாகப் பார்த்தபடியே உள்ளே அழைத்துச் சென்றான் பி.ஏ. கைலாசம். அந்த ஜோதிடரும் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடிதான் நடந்தார்.



"முதலாளி தான் ஜோசியம் பாக்கணும்னாரா?"

"ஆமாம்..."

"அவர் இதை எல்லாம் நம்பாதவராச்சே?"

"இப்படிச் சொல்ற எவ்வளவோ பேரைத்தான் காலம் மாத்திடுதே..."

"அது என்னவோ உண்மைதான். லாட்ஜ்ல அழுக்கு ரூம்ல தங்கி இருக்கற நான் இங்க வருவேன்னு கண்டேனா என்ன?"

ஜோதிடர் ஸ்லாகிப்புடன் நடந்து பாண்டுரங்கன் முன்னால் சென்று நின்றார். கதவும் தாழிடப்பட்டது. கைலாசமும் ஒதுங்கிக் கொண்டான்.

"உட்காருங்க..." என்றார் பாண்டுரங்கன்.

"சந்தோஷம். நீங்க என்ன கூப்பிட்டு விட்டது என்னோட பாக்யம்."

"நான் ஜோசியம் பாக்கத்தான் கூப்பிட்டேன்னு உங்களுக்கு யார் சொன்னது?"

பாண்டுரங்கனின் எதிர்க்கேள்வி ஜோசியரை இடித்தது.

"அப்போ..."

"எனக்கு சில சந்தேகங்க... தெளிவுபடுத்திக்கத்தான் கூப்பிட்டேன்."

"சந்தேகம் எதுல?"

"நீங்க என் மகளுக்கு ஜாதகம் பார்த்து, ஒரு மாசத்துல கல்யாணம் ஆயிடும்னு சொல்லியிருக்கீங்களே... அதுல..."

"உங்க மக பேர்...?"

"தேன்மொழி."

"எனக்கு ஞாபகமில்லை. ஆனா, நான் அப்படிச் சொல்லியிருந்தா அதுல மாற்றமில்ல..."

"அப்ப நீங்க சொன்னா சொன்னதுதான்னு சொல்லுங்க..."

"ஆமாம்..."

"அப்படின்னா நாளைக்கு மழை பெய்யுமா, பெய்யாதான்னு உங்களால சொல்ல முடியுமா?"

"சொல்லலாம். ஆனா நான் சொல்லி முடிக்கறதுக்கு கணக்கு போடணும். அந்தக் கணக்குப் போடவே ஒரு நாலு நாள் ஆகும். அதுக்குள்ள மூணு நாள் ஓடிடும்."

"சரி... அடுத்த வாரம் என் வாழ்க்கைல என்ன நடக்கும்னு நான் கேட்டா கரெக்டா சொல்ல முடியுமா?"

"நிச்சயமா... அதுக்கு உங்க சரியான ஜாதகம் வேணும். நான் உங்களைப் பலவிதமாக் கேள்வி கேட்பேன். அதுக்கு நீங்க பதில் சொல்லணும். இதெல்லாம் நடந்தா, அடுத்த வாரம் பூரா உங்க வாழ்க்கை எப்படி இருக்கும்னு சொல்லிடுவேன்."

"அப்ப ஏன் நீங்க இங்க இருக்கீங்க? டெல்லில பிரதமர் பக்கத்துல போய் உக்காந்துக்கலாமே?"

"தாராளமா... பிரதமர் கூப்ட்டா போய்ட்டுப் போறேன்." ஜோதிடரின் தளராத பதில் பாண்டுரங்கனைக் கொஞ்சம் அசைத்தது.

"முடிவா கேட்கறேன்... நாளைக்கு நடக்கறதை முன்னாடியே சொல்ல முடியும்னா எவ்வளவோ பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்த முடியுமே. இந்த கும்பகோணம் விபத்து, அப்புறம் சுனாமி, நேத்துக்கூட மஹாராஷ்டிரால மலை மேல ஒரு முந்நூறு, நானூறு பேர் எரிஞ்சு போயிருக்காங்க... எல்லாரையும் காப்பாத்தியிருக்கலாமே..."



"நிச்சயமா... அவங்க ஜாதகத்தோட யாராவது வந்து கேட்டுருந்தா நான் காப்பாத்தியிருப்பேன்."

"அங்கதானே சைட்ல பூந்து நீங்க தப்பிச்சுக்கறீங்க. அது என்ன ஜாதகம்? புடலங்கா ஜாதகம்..."

"புடலங்கா ஜாதகமெல்லாம் இல்ல. ஜாதகம்தான் எல்லாம். அது ஒரு கணக்கு. அது ஒண்ணும் நம்ப முடியாத மாயாஜாலம் இல்லை. அது ஒரு விஞ்ஞானம். மோட்டார் வாகனப் புகை நம்மை பாதிக்கிற மாதிரி, சிகரெட் புகை நம்மை பாதிக்கிற மாதிரி, புழுதியால ஆஸ்த்மா சிலருக்கு வர்ற மாதிரி, வானத்துல இருக்கிற ஒன்பது கிரகங்கள் மனித உடம்பையும், மனசையும் பாதிக்குதுங்கறதைச் சொல்றதுதான் ஜாதகம். அது எப்படி பாதிக்குது... எவ்வளவு பாதிக்குதுன்னு சொல்றவன்தான் ஜோதிடன். அவன் போட்ற கணக்குல வேணும்னா தப்பு வரலாம். ஆனா ஜோதிடம் பொய் இல்ல..."

"இப்படி சொல்லிச் சொல்லியே எல்லாரையும் மொட்டை அடிச்சுடுங்க."

"உங்களுக்குத் தப்பா யாரோ ஜோசியம் சொல்லியிருக்காங்க. அவங்க மேல இருக்கற கோபத்தை நீங்க என் மேல காட்றதா நான் நினைக்கறேன்..."

"நான் இதுவரை ஜாதகமே பார்த்ததில்ல. அப்புறம் எனக்கு யார் தப்பா ஜோசியம் சொல்ல முடியும்?"

"சரி, இப்ப நான் பாக்கறேன். எனக்கு முழு ஒத்துழைப்புத் தாங்க. உங்களைப் பிரிச்சு மேஞ்சுட்றேன். அப்புறமா முடிவுக்கு வாங்களேன்..."

"அப்ப நீங்க என்கூட போட்டிக்குத் தயாரா யிட்டீங்க..."

"இன்னிக்கு என் ஜாதகப்படி ஒரு பெரிய மாற்றம் நிகழணும். எப்ப இங்க நீங்க இப்படிப் பேசிட்டீங்களோ, அப்பவே முடிவு பண்ணிட்டேன் — உங்க மூலமாத்தான் அந்த மாற்றம்னு..."

"மாற்றம்னா எப்படி? நல்ல விதமாவா — கெட்ட விதமாவா?"

"இது விளையாட்றதுக்கு முந்தியே யாருக்கு வெற்றின்னு கேக்கற மாதிரி இருக்கு. நிச்சயம் இரண்டு பேர்ல ஒருத்தர் ஜெயிப்போம். கவலைப்படாதீங்க..."

"நான் ஜெயிச்சுட்டா, நீங்க மொட்டையடிச்சுக்கணும். இந்த வீட்ல நான் சாப்பிடற இலையைத் தினமும் எடுக்கணும். சம்மதமா?"—

பாண்டுரங்கனிடம் ஒரு தீவிரம் கொந்தளிப்போடு வெளிப்பட்டது.

"சரி, நான் ஜெயிச்சுட்டா...?" ஜோதிடர் நிமிர்ந்தார்.

"நீங்க கேட்கறதைத் தர்றேன்..."

"உசுரைக் கேட்பேன். தருவீங்களா?" பாண்டு ரங்கனுக்கு ஒரு வினாடி நெஞ்சையடைத்தது.

"என்ன சார்... என்னைக் கேவலப்படுத்தற அளவுக்கு நீங்க போகலாம். நானும் அதுக்குச் சமமா கேக்கணும்ல!"

"சரிய்யா... என் வரைல இப்ப சில விஷயங்கள் எனக்குப் பிடிக்காம நடந்துக்கிட்டு இருக்கு. அது நடந்து நான் உசுரோட இருக்கறதுக்கு நான் செத்துடறது கூட மேல்தான்... சம்மதிக்கறேன்."

"கவலைப்படாதீங்க. உங்க உசுர் என்னைக்குப் போகணுமோ, அன்னிக்குத்தான் போகும். நானும் சும்மா பேச்சுக்குத்தான் கேட்டேன். நான் சொன்னபடி மட்டும்



நடந்துட்டா, நான் விரும்பற மாதிரி நீங்களே மாறிடுவீங்க. நான் எதுவுமே சொல்ல வேண்டாம். எங்க உங்க ஜாதகம்...?"

"யாருக்குத் தெரியும்? பிறந்த தேதியையும் நேரத்தையும் சொல்றேன். நீங்களே கணிச்சு முடிங்க. அப்புறம் நான் கேள்வி கேட்கறேன்..."— என்ற பாண்டுரங்கன் ஜோதிடரிடம் அவர் கேட்ட தகவல்களைத் தரவும், அவர் குறித்துக் கொண்டு புறப்பட்டார்.

ரமேஷ் தேன்மொழியைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. முகமெல்லாம் வீக்கமுடன் கிடந்தவன் அருகில் அவனது அத்தை.

"நீதான் அந்தப் புண்ணியவதியா... அப்பாக்காரர் அடிச்சு முடிச்சுட்டா. நீ என்ன மருந்து, மாத்திரை வாங்கிட்டு வந்துருக்கியா?" — கிண்டலாகக் கேட்டாள் அத்தை. தேன்மொழி அவளை லட்சியம் செய்யாமல் ரமேஷ் அருகில் சென்று, "சாரி, ரமேஷ்... உன்னை அப்பா எப்படிக் கண்டுபிடிச்சார்ன்னுதான் தெரியலை..." என்றாள்.

ரமேஷ் மிடறு விழுங்கினான். அவள் ஒரு நூறு ரூபாய்க் கட்டை அத்தை முன் நீட்டினாள். அதை அவள் எதிர்பார்க்கவில்லை.

"என்னம்மா... அப்புறம் இதுக்கு ஒரு தடவை அடி வாங்கவா?"

"இல்லீங்க... இனி யாரும் அடிக்க வரமாட்டாங்க. அதுக்கு என்ன செய்யணுமோ, செய்துருக்கேன்..." என்றாள்.

"போதும்மா... உங்கப்பா பத்தி ஏற்கனவே கேள்விப் பட்டிருக்கோம். அரண்மனைக் கோவம் ஆகாதும்மா ஏழைக்கு... நீ இடத்தைக் காலி பண்ணு. ரமேஷ்"ம்

நாளைக்கே மெட்ராஸ் போயிடப் போறான். இனி இந்தப் பக்கமே தலைவெச்சுப் படுக்க மாட்டான். ஆளை விடு புறப்படு...” அத்தையின் பதில் எல்லாப் பெண்களின் பதிலைப் போன்றதுதான். அதனால் அவள் ரமேஷைப் பார்த்தாள். அவன் துணிச்சலாக எதையாவது சொல்வான் என்றும் எதிர்பார்த்தாள். அவன் அவளை அருகில் அழைத்தான்.

“தேன்மொழி! நம்ம வாழ்க்கை ஒண்ணும் சினிமா இல்லை. அதுல கதாசிரியர்ங்கற பிரம்மா விருப்பம்தான் காதலர்கள் விருப்பம். அதோட நானும் விஜயகாந்தோ, ரஜினிகாந்தோ இல்லை — கூட்டம் கூட்டமா ரவுடிங்க வந்தா அடிச்சுத் துரத்த... அவங்களுக்குப் பின்னால ஸ்டண்டு மாஸ்டர் இருக்காரு. எனக்குப் பின்னால யாருமில்ல தேன்மொழி. இந்த உடம்புல விழுந்த அடிகூட ஆறிடும். ஆனா அம்மா அப்பா இல்லாத அனாதையா உன் விருப்பத்துக்கு நான் பயன்படுவேன்னு திட்டம் போட்டு என்னை நீ பிடிச்சதை நான் ஆசையாக் காதலிச்சதா நினைச்சிட்டேன். அதைத்தான் தாங்க முடியலை. நல்லவேளை இந்த மட்டுல நான் தப்பிச் சிட்டதாதான் நினைக்கறேன். என்னை விட்ரு, வேறு இளிச்சவாயன் யாரையாவது பாரு”—என்று விரக்தியாகப் பேசியவன் அதன்பின் அப்படியே திரும்பிப் படுத்துக் கொண்டான். தேன்மொழி விக்கித்துப் போயிருந்தாள். பிரமை பிடித்தவள் போல வெளியே வந்தாள். வெளியே ஒரு உருவம் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

மீண்டும் பாண்டுரங்கன். எதிரில் ஜோதிடர். கேள்விகள் ஆரம்பமாயின.

“நான் எம்.பி. ஆவேனா?”

“தலைகீழா நின்னாலும் ஆகமுடியாது.”



“என் மகள் என் விருப்பப்படி நடந்துக்குவாளா?”

“எந்தக் காலத்துலையும் நடக்கமாட்டா...”

“அவ கல்யாணம் இந்த மாசம் நடக்கும்கறது உண்மையா?”

“நடந்தே தீரும். உங்க பொண்ணு அவ விரும்பற சந்தோஷமான வாழ்க்கையை வாழ்ந்தே தீருவாங்க.”

“அடுத்த வாரம் இதே தேதில நான் எப்படி இருப்பேன்?”

“எழுதிக்குங்க. தலைகீழா மாறி இருப்பீங்க...”

“இதெல்லாம் எதுவும் நடக்கலைன்னா?”

“மொட்டை அடிச்சுக்கிட்டு, உங்க வீட்டு டேபிளை சுத்தம் செய்வேன். பேச்சு மாற மாட்டேன். ஆனா உங்க கிரகங்க என்னை அப்படியெல்லாம் விட்டுடாது...”

“பாக்கறேன்... ஒரு வாரம் — ஒரே வாரம் — நீங்க சொல்றபடி நடக்குதான்னு... நடுவுல நல்ல முகூர்த்த நாள் வருதா...?”

“வருதே... நாளைக்கே கூட முகூர்த்தநாள்தான்.”

“அப்ப என் உறவுக்காரப் பையன் நாளைக்கே என் மக கழுத்துல தாலிய கட்டுவான். உங்களுக்கு முதல் அடியை நாளைக்கே கொடுக்கறேன்...”—என்ற பாண்டு ரங்கன் அழுத்தமாகத் தன் மீசையை நீவிக் கொண்டார். ஆனால் ஜோதிடர் முகத்தில் புன்சிரிப்பு.

அவர் எதிரிலேயே விஷயத்தை மனைவியிடம் இண்டர்காமில் கூறவும், அவளோ ஸ்தம்பித்தாள்.

“நமக்கு ஒரே மகள்... இப்படி அவசர அவசரமா பண்ணா எப்படிங்க?”

"நாளைக்குக் கல்யாணம் மட்டும்தான் சிம்பிளா... ரிசப்ஷன், கல்யாணம் மாதிரி பல லட்சம் செலவுல நடக்கும். கவலைப்படாதே..." — என்று அவள் வாயை அடைத்தார். அதன்பின் விஷயம் தேன்மொழியை எட்டிய போது அவள் அப்படியே ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்து விட்டாள். நெடுநேரம் வரை ஸ்தம்பிப்பிலேயே இருந்தவள், சட்டென்று விடுபட்டாள். ஓசைப்படாமல் வெளியே புறப்படப் பார்த்தவளின் எதிரில் அவளையே நோட்டமிட்டபடி நான்கு தடியர்கள்.

"நீங்களும் கூட வாங்க. கல்யாணப் பட்டுப்புடவை வாங்க நான் புடவைக் கடைக்குப் போறேன்..." என்றாள். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இறுதியில் ஆனந்தியோடு அவள் புறப்பட, அவர்களும் தொடர்ந்தனர். கடைக்கு வெளியே அவர்கள் நின்று கொள்ள தேன்மொழியும், ஆனந்தியும் உள்ளே நுழைய, ஆனந்தி புடவைகளில் கவனமாக இருந்தபோது மெல்ல நழுவிய தேன்மொழி டிரஸ் சேஞ்ஜ் செய்யும் அறைக்குச் சென்று கையோடு எடுத்து வந்த பர்தாவை எடுத்து மாட்டிக்கொண்டாள். அப்படியே அங்கிருந்து நழுவியவள், இறுதியாகப் புடவையில் கவனமாயிருந்த ஆனந்தியை நின்று ஒரு பார்வை பார்த்துவிட்டுப் புறப்பட்டாள். அவள் தலைமறைந்த அரைமணி நேரம் கழித்துத்தான் அவள் ஏமாற்றிவிட்டுப் போனதே தடியர்களுக்கும், ஆனந்திக்கும் தெரிய வந்தது. ஆனந்திக்கு ஒரு பக்கம் சந்தோஷம் — ஆனால் இன்னொரு பக்கம் பாண்டுரங்கனை நினைத்து ஒரே படபடப்பு. அவளுக்கு மயக்கமே வந்துவிட்டது.

தேன்மொழி ஓடிவிட்டாள் என்பது தெரிந்த மறு நொடியே ஒரு கூட்டம் ரமேஷ் வீட்டுக்குத்தான் ஓடியது. அங்கே அவனுக்கோ மிக சீரியஸான நிலை. அடிபட்ட



நிலையில் மெல்ல குணமாகிக் கொண்டு வந்தவன் உடல்நிலையில் திடீரென்று ஒரு பின்னோட்டம்.

வீடே பதறிக் கொண்டிருந்தது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் போலீசுக்குப் போகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"இதை எல்லாம் இப்படியே விடக்கூடாது. இரண்டு வருஷம் முந்தி தாக்கின விவகாரம் எல்லாம் இப்ப விசாரணைக்கு வரும்போது இரண்டு நாளைக்கு முந்தி நடந்த விஷயம் இது. பயந்தா எப்படி...?" என்று ஏத்தி விட்டுக் கொண்டிருந்தனர். அவன் அத்தையும் ஒரு முடிவுக்கு வந்து போலீசுக்குப் புறப்பட்டு விட்டாள். பத்திரிகை படிக்கும் பழக்கம் உள்ளவள் என்பதால் தனக்குத் தெரிந்த ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டருக்குத் தான் முதல் ஃபோன் செய்தாள். பாண்டுரங்கன் வரையில் வினை ஆரம்பமாயிற்று. ரிப்போர்ட்டரும், "இது பரபரப்பான செய்தி. விடக்கூடாது" என்றபடியே அவளைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொன்னான்.

வீட்டில் கிழக்கும் மேற்குமாய் நடந்து கொண்டிருந்தார் பாண்டுரங்கன். ஒரு கூட்டம் தேன்மொழியைத் தேடி அலைய, ஸ்டேஷனில் இருந்தும் ஃபோன்.

"சார்! உங்க மேல கம்ப்ளைண்ட் கொடுத்திருக்காங்க. எஃப்.ஐ.ஆர். ஃபைல் பண்ணலைன்னா அதையே ஒரு குற்றமா பத்திரிகைல எழுதுவோம்னு ரிப்போர்ட்டர் ஒருத்தர் குதிக்கிறாரு..." — என்றது அந்த ஃபோன்....

"அவனுக்கு எவ்வளவு விலைன்னு கேள்..." என்றார் பாண்டுரங்கன்.

"இல்ல சார்... இந்த ரிப்போர்ட்டர் பணத்துல விழற ஆளா தெரியல..."

"அப்ப ரேட் அதிகமா இருக்கும். நானே நேர்ல வர்றேன்..." என்றபடி கிளம்பினார்.

பார்த்துக் கொண்டேயிருந்த ஆனந்திக்கு நெஞ்சைப் பிசைந்தது. கௌரவமாய்ப் போய்க் கொண்டிருந்த ஒரு வாழ்க்கை அப்படியே திசைமாறி சின்னாபின்னமாவது போல் தோன்றியது. பூஜை அறைக்குள் பாட்டி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள். அருகே சென்ற ஆனந்தியைக் கட்டிக் கொண்டவள், "ஆனந்தி... என்னை அந்தத் தியாகராஜ சுந்தரம் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போடி," என்றாள். அப்படியே பொலபொலவென்று கண்ணீரும் சிந்தினாள். ஆனந்தியும் 'சரி' என்பது போல அணைத்துக் கொண்டாள்.

அரக்கப்பரக்க வந்து நின்ற பாண்டுரங்கனின் பி.ஏ. கைலாசத்தைப் பார்த்து ஜோதிடருக்கு ஏதோ விபரீதம் என்பது புரிந்து விட்டது.

"அய்யாசாமி... நீங்க சொன்ன மாதிரிதான் எல்லாமே நடக்கும் போலத் தெரியுது. இந்த நிமிஷம் எம்டி. அதை எல்லாம் சமாளிச்சிடலாம்னு தான் நினைக்கறார். ஆனா நான் அப்படி நினைக்கல. எனக்கு உங்களை விட்டா வழியும் தெரியல. சார் உள்ற போனா, ஐந்நூறு குடும்பத்துக்கு வேலை போய் சோத்துக்கே லாட்டரிஅடிப்போம்... எது எதுக்கோ ஜோசியத்துல பரிகாரம் சொல்றீங்க. எங்க சார் விஷயத்துக்குப் பரிகாரம் இருந்தா சொல்லுங்கனேன். அவருக்காக நான் செய்யறேன்" என்றான். ஜோதிடருக்குக் கைலாசத்தின் கவலையில் உள்ள நியாயம் புரிந்தது.

"அந்த அம்பாள் மனசு வெச்சா அவர் தப்பலாம். அவர் ஜாதகத்துல அதுக்கும் இடம் இருக்கு. ஆனா நான் அதைக் காரணமாதான் சொல்லலை..." என்றார்.



"என்ன செய்யணும்னு சொல்லுங்க. அவர் பொண்ணு ஓடிப் போய்ட்டா. அதுக்குக் கல்யாண வயசாயிடிச்சு. விவரமும் ஜாஸ்தி. எங்காவது போய் நிச்சயம் அது கல்யாணம் பண்ணிக்கும். இங்க எம்டியால தாக்கப்பட்ட பையனும் சாகக் கிடக்கறான். உயிர் போய்ட்டா– கம்பி எண்ண வேண்டியதுதான். உள்ள போய்ட்டா... அப்புறம் எம்.பி. பதவியாவது, புடலங்காயாவது– எப்படிப் பார்த்தாலும் எல்லா விதத்துலையும் எம்.டி.க்கு இது ஒரு அடி. அந்த யந்திரத்தை அவர் கையால தூக்கிக் கொடுத்தப்பவே நினைச்சேன், இப்படி ஆகும்னு... சரியாப் போச்சு..." கைலாசம் எல்லாவற்றையும் கூறிவிட்டு, யந்திரம் பற்றிக் கூறவும் ஜோதிடர் முகத்தில் ஒரு அசாத்திய மாற்றம்.

"எந்த யந்திரம்?" என்றார் வேகமாக.

"யாருக்கு பேரைத் தெரியும்? ஆனா அது வீட்டை விட்டுப் போன பிறகுதான் அவருக்குக் கிறுக்குப் பிடிச்சது" என்றான்.

"அது இப்ப யார்கிட்ட இருக்கு...?"

"அந்தத் தியாகராஜ சுந்தரம் கிட்டதான்..."

"எனக்கு என் ஜோசியம் ஜெயிக்கறதுகூட பெருசில்ல. அதோட சக்தி பற்றி நான் கேள்விப்பட்டிருக்கேன். அது சாதாரண யந்திரம் இல்லை. அதோட சக்தி தலையெழுத்தையே மாத்தக் கூடியது. அதுலையும் சித்தர்கள் தங்கள் தவசக்தியை உருவேற்றிக் கொடுக்கற யந்திரங்கள் பிரளயத்தையே வரவழைக்கும். வர இருக்கற பிரளயத்தைத் தடுக்கவும் செய்யும்..."

"இப்ப நடக்கறதை எல்லாம் பாக்கும்போது, நம்ம கைல எதுவும் இல்லைன்னு நல்லா தெரியுது. நீங்க என்ன சொன்னாலும் நான் கேக்கறேன். இப்ப தியாகராஜ

சுந்தரம் கிட்டத்தான் அந்த யந்திரம் இருக்கு. அது திரும்ப எங்க எம்.டி.கிட்ட வந்துட்டா எல்லாம் சரியாயிடுமா?"

"நிச்சயமா..."—ஜோதிடர் கூறும்போதே பி.ஏ. கைலாசத்துக்கு ஃபோன் செய்ய செவ்வக உலோகமான செல்ஃபோனை எடுத்துக் காதருகே வைத்தான்.

"சார்... அந்தப் பொண்ணு தேன்மொழியையும் அவங்க லவ்வரையும் பிடிச்சிட்டோம். கேரளாவுக்குப் போய்க்கிட்டிருந்தாங்க. குமிழி மலைகிட்ட மடக்கிப் பிடிச்சோம். சார்கிட்ட சொல்லிடுங்க..." என்றது அந்த ஃபோன். கைலாசத்துக்கு அதைக் கேட்கவும் 'அப்பாடா' என்றிருந்தது. கூடவே 'யார் அந்தப் புதுக் காதலன்?' என்கிற கேள்வி. விஷயத்தைப் பாண்டுரங்கனிடம் சொல்வதற்காக ஃபோன் செய்தபோது அவரும் ரிப்போர்ட்டரை சமாதானம் செய்து விட்டதோடு, ரமேஷ் குடும்பமும் சமாதானமாகி விட்டதைக் குறிப்பிட்டார்.

மலைபோல வந்தது பனி போல விலகும் என்று கேள்விப்பட்டிருக்கிறான் கைலாசம். ஆனால் இங்கே இப்பொழுது அதை உணர்கிறான்.

"ஜோசியரே.. எல்லாம் அப்படியே தலைகிழா மாறிப் போச்சு ஜோசியரே... எப்படின்னு தெரியலை..." என்றான் வியப்பான வியப்பாக.

"அப்படியா... அப்ப அந்த யந்திரம்?"

"அதுக்கு இனி அவசியமில்லேன்னு தான் நினைக்கறேன்..."

"என்னய்யா இது மாயாஜாலமா இருக்கு..."

"எங்க எம்.டி.க்கு எப்பவுமே அசுர ஜாதகம். அவர் நினைக்கற மாதிரிதான் நடக்குமோ என்னவோ.." ஜோதிடருக்கே அந்தப் பதில் குழப்பத்தைத் தந்தது.



"என்ன ஜோதிடரே... உங்களுக்கு நீங்க போட்ட சபதம் ஞாபகத்துக்கு வந்துடுச்சா..."

"அது மட்டுமில்ல... எந்த கிரகம் இப்படி வேலை செய்யுதுன்னு தெரியலியே..."—என்று கையைச் சொடக்கிக் கொண்டார். கைலாசம், தான் வந்த வேலை முடிந்து விட்டது என்பது போல, "சரி ஜோதிடரே, நான் கிளம்பறேன்..." என்று புறப்பட்டான்.

பங்களாவுக்குள் நுழைந்தபோது அங்கே பல ஆச்சரியங்கள் காத்திருந்தன. ஒரு தூணில் சங்கர் கட்டப் பட்டிருந்தான். தேன்மொழி அழுது கொண்டிருந்தாள். பாண்டுரங்கன் தீவிர சிந்தனையில் இருந்தார். அதிசயமாக உள்ளே மணி ஓசை கேட்டது. எட்டிப்பார்த்தபோது பூஜையறையில் தியாகராஜ சுந்தரம். அவர் முன்னால் அந்த யந்திரம். அருகில் ஆனந்தியும், பாட்டியும்...

"உங்க விருப்பப்படி இதை நான் உங்களுக்கே கொடுத்துட்டேன். என் விருப்பப்படி இனி பாண்டுரங்கன் நடந்துக்கிட்டா போதும். நான் எதையும் யார் கிட்டையும் கேட்கலை. எதையும் எதிர்பார்க்கவுமில்லை. தானா தேடி வந்ததுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும். இது பாண்டுரங்கனுக்குப் புரியணும். யந்திரம்கறது ஒரு கருவி- அதை எப்படிப் பயன்படுத்தறோம்கறதுலதான் வெற்றி, தோல்வி இருக்கு. இது இருந்தா தான் வெற்றின்னு யார் சொன்னது? இது இல்லாம, இதை விட்டுக் கொடுத்தாக் கூட வெற்றிதான். எனக்கு இது இனி வேண்டாம். தயவு செய்து அந்தப் பையனை அவுத்து விடுங்க. அந்தப் பொண்ணுக்கு அவ மனசுக்கு விருப்பப்பட்டபடி கல்யாணம் செய்து வைக்கப் பாருங்க. அதுதான் எல்லாருக்கும் நல்லது. நான் வர்றேன்..." — என்றபடி தியாகராஜ சுந்தரம் புறப்பட்டார். பாண்டுரங்கனைக் கடக்கும்போது ஒரு பார்வை — 'உன் கையில எதுவுமில்லை' என்பது

போல. பாண்டுரங்கனுக்கும் புரிந்தது. "நில்லுங்க..." என்றார். பின்னர் சங்கரை நெருங்கி கட்டை அவிழ்த்தவர், வாசலை நோக்கிக் கையைக் காட்டினார். அவனும் தப்பித்தால்போதும் என்று ஓடினான். தேன்மொழி அருகில் சென்றவர், "செந்தில் உன் புருஷன் இல்லம்மா. அவனுக்கு மாற்றா இப்படி துரோகிகளை எல்லாம் தேர்வு செய்யாதே. நல்ல பையனாப் பார்த்து விரும்பு. அவனுக்கே கட்டி வைக்கறேன்" என்றார். அவளும் கண்ணீர் பெருக்கினாள். அப்படியே நடந்து உள்ளே சென்றார்.

முதல் முறையாக சாமி படங்களைப் பார்த்துக் கை எடுத்துக் கும்பிட்டார். அப்படியே யந்திரத்தைக் குனிந்து கைகளில் எடுத்தவர், திரும்பி வந்து தியாகராஜ சுந்தரம் கையில் கொடுத்தவராக, "இதை வெச்சுக்கற தகுதி எனக்கு இருக்கறதா தெரிலய்யா. இது உங்க கிட்டையே இருக்கட்டும். என் வரைல நல்ல புத்தியும், தெளிவும்தான் பெருசு. அதைத்தான் இது இங்க இருந்து வெளியே போய் எனக்கு வர வைச்சிடிச்சே..." என்றார். ஆனந்தியும் பாட்டியும் முதல் முறையாக நிஜமான ஆனந்தக் கண்ணீரைச் சிந்தினர்.

முற்றும்